# BTA
BERGEN TAMILSK AVIS

# தேன்தமிழிதழ்

Bergen Tamilsk Avis,
Krohnegården 5b,
5146 Fyllingsdalen,
Norway.

Org.nr: 926 840 320 - ISSN 2703-8440



ஓவியம்: Ms.R Warshini - Hatton Iraby tv Norwood

Bergen Tamilsk Avis - no.06 - July 2021 - தேன்தமிழிதழ் - மாதஇதழ் - இல.06 ஆடி, 2021

கோடை கால விடுமுறை சிறுவர்கள், இளையோர் உட்பட அனைவருமே மகிழ்ச்சியாக வாழும் காலம். பல்வேறு நாடுகளுக்கும், பகுதிகளுக்கும் சுற்றுலா செல்வதும், நாட்டுக்கு நாடு சிதறி வாழும் உறவுகள் நண்பர்களைச் சந்திப்பது, இந்த நாட்களிலே தான். உலகம் பூராகவும் விளையாட்டுப் போட்டிகளும் இக்காலத்திலேயே சிறப்பாக நடைபெறுவதுண்டு. 2020இல் தொற்று நோயினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உலகளாவிய விளையாட்டுப் போட்டிகள் பல இந்த ஆண்டில் நடைபெறுகின்றன. இது விளையாட்டு வீரர்களுக்கும், மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியை கொடுத்துள்ளது. அதேவேளை Covid-19 தொற்று நோய் கோடைகால விடுமுறையின் பின்னர் அதிகரித்து விடக்கூடாது எனவும் சுகாதார பணியகங்கள் மிகவும் விழிப்பாக உள்ளன.

Covid-19 தொற்று நோய் பரவ ஆரம்பமானதும், அதிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி தெரியாது இந்த உலகே ஏங்கி நின்றது. மக்களிடையே நேரடி தொடர்புகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. ஆனால் ஊடகங்கள் இணையவழி தமது பணிகளை துரிதப்படுத்தின. வானொலிகள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள். சமூக வலைத்தளங்கள் என அனைத்து ஊடகங்களும் தமது பணிகளை சிறப்புற ஆற்றி வருகின்றன. தேன் தமிழ் இதழ் இணைய வழி பத்திரிகையும் கூட கொரோனா காலத்தின் ‘நோய்த்தடுப்பு விழிப்புணர்வின் தேவை’ கருதியே ஆரம்பிக்கப்பட்டது. நமது படைப்பாளிகள் மனிதகுல பண்பாட்டு வாழ்தலுக்கான சிறந்த ஆக்கங்களை மிகவும் அக்கறையோடு படைத்து வருகிறார்கள்.
பல இளையோரும் ‘பேசாப் பொருளை பேச நான் துணிந்தேன்...’ என்ற மகாகவி பாரதியின் வாக்குக்கொப்ப, எமது சமூகத்தின் காலாவதியாகிப்போன வரட்டுச் சித்தாந்தங்களை உடைத்துக்கொண்டு தேன் தமிழ் இதழ் வழியாகத் துணிந்து பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள்.
இதுவே நமது முக்கிய நோக்கமும் ஆகும். எனவே பத்திரிகை நீண்ட காலம் தொடர வேண்டிய தேவை இருப்பதனை நாம் அனைவரும் நன்கு உணர்வோம். பல வாசகர்கள் பத்திரிகைகளை அச்சுப் பிரதியில் அனுப்பி வைக்கும்படி கேட்டு வருகின்றனர். அத்துடன் தேன் தமிழிதழ் நோர்வே அரச ஊடக சம்மேளனத்தில், அரச சட்டதிட்டங்களுக்கு அமைய அதிகாரபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட பத்திரிக்கை ஆகும். எனவே நாமும் இங்குள்ள ஊடக விதிகளுக்குக்கு அமைய செயற்ப்பட வேண்டிய கட்டாயத்திலுள்ளோம். அவற்றில் குறிப்பாக இதழினை இலவசமாக வாசகர்களுக்கு வழங்குவதை நோர்வே அதிகாரபூர்வ ஊடக விதிகளில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. குறைந்த பட்சம் ஆண்டு சந்தாவேனும் அறவிட வேண்டும் என்பது முக்கிய விடயமாகும். அதுமட்டுமல்லாது இணைய வழியிலும், அச்சு பிரதி ஊடாகவும் பத்திரிகை தொடர்ச்சியாக வெளியிடுவதானால் எமக்கு பெரிய அளவில் பொருளாதார சிக்கல்கள் ஏற்படும் என்பது யாவரும் அறிந்ததே. எனவே தங்களிடமிருந்து ஆண்டு சந்தாவாக குறைந்தது 200 குறோணர்களை எதிர்பார்த்து நிற்கிறோம். உங்களது இச்சிறு உதவி பத்திரிகையின் வளர்ச்சிக்கு பேருதவியாக அமையும்.









வாசகர்கள் தேன் தமிழிதழ் சந்தா செலுத்த.... வங்கிக் கணக்கு.

Bergen tamilsk avis
3626.26.77936
Spare banken vest

வருடம் 12மின் இதழ்கள் 200குரோணர்கள்.
அச்சுப்பிரதி- 300குரோணர்கள் தபால்செலவு உட்பட (நோர்வே).
மேலதிக விபரங்களுக்கு: யூலியஸ்
தொலைபேசி எண்: (47) 924 63 674

# Utøya - 10År

# உத்ஒய்ய . 10ஆண்டுகள்



Utøya நோர்வேயிலுள்ள மிக அழகிய தீவுகளுள் ஒன்று(படத்தில் காண்க). இங்குதான் 22.07.2011இல் மிகப்பெரும் தீவிரவாத தாக்குதல் இடம்பெற்றது. நோர்வே மிகவும் அமைதியான நாடு. அமைதிக்கான நோபல்பரிசும் கொடுக்கப்படுகிறது. உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது நோர்வேயில் தீவிரவாத தாக்குதல்கள் இல்லை என்றே கூறலாம். இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் 2011 யூலை 22இலே நோர்வே ஒரு தடவை அதிர்ந்தது. அன்று வெள்ளிக்கிழமை மாலை 15.25 மணிக்கு நோர்வேயின் தலை நகரான ஒஸ்லோவில் பல அரச பணியக கட்டிடங்களின் தொகுப்பான Regjeringskvartaletவுக்கு அருகில் பெருமளவிலான மக்கள் வேலைப்பணிகள் முடித்துவிட்டு அவ்வழியால் சென்று கொண்டு இருக்கிறார்கள்.

வழியில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளை வானிலிருந்து பாரிய சத்தத்துடன் குண்டு ஒன்று வெடிக்கிறது. அவ்விடத்திலேயே 8பேர் கொல்லப்பட்டார்கள். நோர்வேயின் தலை நகரில் தீவிரவாதிகள் நுழைந்து தாக்குதல்களை ஆரம்பித்து விட்டனர் என செய்தி பரவ ஆரம்பிக்கிறது. நகரினை முழுமையாக அடைத்து தீவிரவாதிகளை பிடிக்க காவலர் திட்டமிட்டு கொண்டிருக்கும் வேளையில் Utøya என்ற தீவினை நோக்கி காவல்காரன் (Police) வேடத்தில் ஒரு தீவிரவாதி கனரக ஆயுதங்களுடன் செல்கிறார் என்ற செய்தி காவலருக்கு மக்களிடமிருந்து கிடைக்கிறது. ஒஸ்லோ நகருக்குள் நடந்த தாக்குதல் போன்று இங்கும் நடக்க கூடாது. பாதுகாப்பு தர வருகிறேன் என அவர் கூறியுள்ளார்.

தீவிரவாதியின் மிகப்பெரும் திட்டமிடல் Utøya விலே அன்று நோர்வேயின் சிறந்த அரசியல் கட்சியான தொழிலாளர் கட்சியின் இளைஞர் பிரிவினர் ஒன்று கூடியுள்ளனர். இவ்விடம் சிறுவர் இளையோருக்கான பயிற்சி களமாகவும் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது. பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், தொழில் கட்சியின் சிறந்த அரசியல் தலைவர்களும் கூடி உள்ளனர்.

உண்மையான காவல்காரர் விரைவதற்குள் தீவிரவாதி தாக்குதலை ஆரம்பித்து விட்டார். இளையோரைச் சரமாரியாக சுட்டுக் கொன்றார். பல்கலைக்கழக மாணவர்கள், பட்டதாரிகள், நோர்வேயின் எதிர்கால அரசியல் தலைவர்கள் என 69பேர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார்கள்.

உயிரைப் பாதுகாக்க கடலுக்குள் பாய்ந்து நீந்தியவர்களையும் நோக்கி தாக்கியுள்ளார். மிகப்பெரும் போராட்டத்தின் பின்னர் தீவிரவாதியை காவல்காதுறையினர் கைது செய்தனர்.

இச்சம்பவம் நோர்வேயை மிகவும் அதிர்ச்சி அடைய வைத்தது. வேறு நாடுகளிலிருந்து தீவிரவாதிகள் நோர்வேயுள் நுழைந்து தாக்குதல் நடத்துகிறார்கள் என மக்கள் அங்கலாய்த்துக் கொண்டு இருந்தனர். ஆனால் அன்று 23.30மணியளவில் ஊடக மாநாட்டில் "தீவிரவாதி 32 வயதுடையவர், நோர்வே இனத்தைச் சேர்ந்தவர்" என செய்தியாளர் கூட்டத்தில் காவல்துறை அறிக்கை வெளியிட்டது.

2021 யூலை 22 இல் பத்தாவது ஆண்டு நினைவுகூரல் நிகழ்வுகள் நோர்வேயின் சகல நகராட்சிகளிலும் நடைபெற்று வருகிறது.

**(நன்றி, படங்கள்: சுசீந்திரா-Oslo)**



# அங்கக விவசாயம் -Organic Agriculture
# இப்போதைய இலங்கையில் சாத்தியமா?

-ப்ரியமதா பயஸ்-



இலங்கை ஒரு பாரம்பரிய விவசாய நாடு.
வரலாற்று ஆதாரங்களின்படி இலங்கை சுமார் 2500 வருட கால வரலாற்றுப் பெருமையையும் பண்டைய விவசாய நெறிமுறைகளையும் கொண்ட செழிப்பான பூமியாகும், இலங்கை முன்னொரு காலத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விளங்கியது. அந்த தன்னிறைவு காலம்காலமாக பேணிப்பாதுகாக்கப்படாமல், அரசியல் தலையீடுகள் அதிகார போட்டிகளால் சிதைந்து சின்னாபின்னமாகி தற்போது அழிவின் விளிம்பில் உள்ளது உணவு உற்பத்தி என்பது இப்போது கூவி கூவி ஊக்கப்படுத்தும் நிலைக்கு வந்துவிட்டது. வீட்டுக்கு வீடு வீட்டுதோட்டம், வீட்டுக்கொரு தென்னை, எல்லோருக்கும் விவசாய உற்பத்தி பயிற்சி என நாடே ரணகளப்படும் அளவுக்கு உற்பத்தி சார் செயற்பாடுகள் உள்ளன.

அரசியல் தலைமை மாற்றம் என்பது நாட்டில் பொருளாதார தளம்பலை ஏற்படுத்தியதோடு தன்னிறைவு என்பது நம்மால் முடியாதா? என்கின்ற கேள்விக்குறியையும் கொண்டுவந்துள்ளது.

இலங்கையில் விவசாயத்துறை இருக்கிறது, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இருக்கிறது ஏற்றுமதி இறக்குமதி பகுதி இருக்கிறது, ஆனால் கடந்த பல ஆட்சிகளில் இந்த துறைகள் இயங்கினவா? எவ்வாறு இயங்கின? என்னமாதிரியான உற்பத்திசார் ஏற்றுமதிசார் அக்கறையை அவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதெல்லாம் வெளித்தெரியாத விடயங்கள்.

தற்போது இலங்கையில் சில முக்கிய உணவுப்பொருட்களை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டு, உற்பத்தி செய்யுங்கள் என நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

அதிலும் முக்கியமாக செயற்கை வளமாக்கிகளை தடை செய்துவிட்டு இயற்கை வளமாக்கிகளை நீங்களே உற்பத்தி செய்து அவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யுங்கள் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதனால் நாட்டில் பெரும் அல்லோலகல்லோல நிலைமை காணப்படுகிறது.

பயிர்களுக்குத் தேவையான நைதரசன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாஸியம் ஆகிய சத்துக்கள் மண்ணிலிருந்து தான் செடிகளுக்கு, அதாவது நாம் பயிரிடும் நெல்,சோளம், உளுந்து, பயறு, நிலக்கடலை துவரை போன்ற அனைத்துப் பயிரினங்களுக்கும் கிடைக்கிறது.

நாம் முந்தைய காலங்களில் பயிரிட்ட பாரம்பரிய நெல் ரகங்கள் குறைந்த அளவே விளைச்சல் கொடுக்கும் தன்மை கொண்டவையாக இருந்தன. ஏனென்றால் அவை மண்ணிலிருந்து குறைந்த அளவு நைதரசன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாஸியம் சத்துக்களை எடுக்கும் வல்லமை கொண்டவை.

இப்படி குறைந்த சத்துக்களை எடுத்துக் கொண்டு குறைந்த அளவே விளைச்சலைக் கொடுத்தது. ஆனால் நாளுக்கு நாள் உலக மக்கள் தொகை பெருக ஆரம்பித்தவுடன் நம் நாட்டிலும் மக்கள் தொகை பெருக்கம் அடைந்தது. அனைத்து மக்களுக்கும் உணவு அளிக்க வேண்டிய சூழ்நிலையில், உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டுள்ளோம்.

இதற்கு இரசாயன முறையில் தயாரிக்கப்படும் உரங்களைச் சத்துக்களாக எடுத்துக் கொண்டு அதிகவிளைச்சலைக் கொடுக்கக்கூடிய ரகங்களை உருவாக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் புதிய உயர் விளைச்சல் தரக்கூடிய ரகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் இலங்கை விவசாயத்துறை பல உத்திகளை பயன்படுத்தி பல்லின, கலப்பின இனங்களை உருவாக்கியது.
அதேவேளை வெளிநாடுகளில் இருந்தும் இந்த கைபிரிட் இனங்களை வரவழைத்து நாட்டில் இருந்த பாரம்பரிய இனங்களை இல்லாது ஒழித்தது.

இலங்கையில் அதிகளவு இரசாயன உரங்களை உட்கொண்டதன் விளைவால் நெல், மற்றும் பயிரினங்கள் அதிக விளைச்சலைக் கொடுத்தது. இத்தகைய செயற்பாடு நடைபெறாமல் இருந்திருந்தால் நமது அதிகரித்த உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடிந்திருக்குமா? என்பது கேள்விக்குறிதான்.



இதற்கும் அப்பால் விவசாயத்தைத் தொழிலாகச் செய்பவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டது. விளைநிலங்கள் எல்லாம் வீட்டுமனைகளாகி விட்டன. இதற்கிடையில் மக்களுக்கான உணவை உற்பத்தி செய்ய வேண்டுமானால் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறவேண்டியது அவசியம். அதற்குத் தேவை மற்றுமொறு பசுமைப் புரட்சிதான். ஆனால் அவற்றை ஒட்டுமொத்த தடைகளோடு செய்வதென்பது மிகுந்த சிரமமான விடயமே.

அங்கக விவசாயம் (Organic Agriculture) என்று பல முறைகளாகக் கூறி வருகிறார்கள். தற்போது இயற்கை விவசாயம் செய்ய வேண்டுமானால், எத்தனை விவசாயிகளிடம் உழவு மாடுகள் உள்ளன.
அப்படி மாடுகள் இருந்தால் எத்தனை பேர் மாடுகளை வைத்து ஏர் ஓட்டுகிறார்கள். அப்படியே இருந்தாலும் அத்தனை மாடுகளுக்கும் தேவையான உணவு கிடைக்கிறதா? எத்தனை விவசாயிகள் ஏர் ஓட்டுவதற்குத் தயாராக உள்ளார்கள்.

மாறுகின்ற சூழ்நிலைக்கு ஏற்ப விவசாயத்தை மாற்றாவிட்டால், விவசாயிகளின் நிலைமை கேள்விக்குறியாக மாறிவிடும். விவசாயத் தொழில் இலாபகரமாக இல்லாமல் போய்விடும் ஒரு காலத்தில் விவசாயம் செய்ய ஆட்களைத் தேட வேண்டிய நிலைக்கு நிச்சயம் செல்ல நேரிடும்.

இயற்கை வேளாண்மையைத் தவறு என்று சொல்லவில்லை. மேல் சொன்னவாறு விவசாயத்திற்கு மாடுகள், தேவையான அங்கக உரங்கள் இருந்தால் அப்படி விளைவிக்கும் பொருட்களுக்கு உண்மையில் கட்டுபடியான விலை கிடைத்தால், கண்டிப்பாக அனைத்து விவசாயிகளும் இயற்கை வேளாண்மையைச் செய்து அனைத்து பொருட்களுக்கும் செயற்கை உரம் போடாமல், பூச்சி மருந்து அடிக்காமல் கொடுத்திருப்பார்கள்.

ஆனால் அனைத்துத் துறையிலும் நாம் உபயோகிக்கும் பொருட்களில் மாற்றங்களை சந்தித்துவிட்டு, விவசாயத்தில் மட்டும் இன்னும் பழைய முறையில் செய்யப்படும் உணவுகள் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி நியாயம்.

சரி இந்த பயிர் வளச்சியில் விவசாயிகள் மற்றும் துறை சார்ந்தவர்கள் அறிந்திருக்க வேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன - பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கும் அங்கக (இயற்கை) மற்றும் அனங்கக (செயற்கை) பொருட்களுக்கு உரம் என்று பெயர். தாவரங்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை பேரூட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

இந்த பேரூட்டச்சத்துக்கள் (Macronutrients) தாவரங்களின் வளர்ச்சி மற்றும் உற்பத்திக்கு அதிக அளவில் தேவைப்படும் சத்துக்களாகும்.
அவை:-
-கார்பன்(C), ஹைட்ரஜன்(ர்), ஒக்ஸிஜன்(O), நைதரசன் (N), பொஸ்பரஸ் (P), பொட்டாசியம;(K), கல்சியம் (Ca), மக்னீசியம;(Mg), கந்தகம்(S). இந்தசத்துக்கள் இயற்கையானவை இவற்றை தாவரங்கள் மண், நீர் மற்றும் காற்றிலிருந்து பெற்றுக் கொள்கின்றன.

நுண்ணூட்டச் சத்துக்கள் (Micronutrients) என்பது பயிர் வளர்ச்சிக்கு மிகக் குறைந்த அளவில் ஆனால் அத்தியாவசியமாகத் தேவைப்படும் சத்துக்கள் நுண்ணூட்டச் சத்துக்கள் எனப்படும்.

அவை:-
இரும்பு(Fe), மங்கனீஸ்(Mn), துத்தநாகம்(Zn), தாமிரம்(Cu), போரன்(B), மலிப்டினம்(Mo) குளோரின்(CL), சோடியம்(Na), சிலிக்கன்(Si), அயோடின்(I), ப்ளூரின்(F), கோபல்ட்(Co), செலினியம்(Se), அலுமினியம்(Al), வெனடியம்(V) போன்ற தனிமங்களும் பயிர் வளர்ச்சிக்கு சிறிதளவு தேவைப்படுகின்றன.

இவற்றில் கார்பன் என்பது பயிர்கள் கார்பனை காபனீர் ஒக்ஸைட்(CO2) வடிவத்தில் வளிமண்டலத்திலிருந்து கிரகித்துக் கொள்கின்றன. உணவு தயாரிக்கவும், புரோட்டோபிளாசம் மற்றும் செல் சுவர் உற்பத்திக்கும் கார்பன் தேவைப்படுகிறது.
ஹைட்ரஜன் - பயிர்கள் நீரிலிருந்து பெறுகின்றன. இது தாவரத்தின் உடற்செயலியல் நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒட்ஸிசன் - நீர் மற்றும் வளிமண்டலத்திலிருந்து இச்சத்து தாவரங்களுக்கு கிடைக்கிறது.
இச்சத்து தாவரங்கள் உயிர் வாழவும், உடற்செயலியல் நிகழ்ச்சிகள் நடைபெறவும் பயன்படுகிறது.

நைட்ரஜன் (Nitrogen - N) இது தாவரத்தின் அனைத்து செல்கள் மற்றும் புரோட்டோபிளாசத்தில் நைட்ரஜன் உள்ளது. பயிர்களுக்கு பசுமை நிறத்தைக் கொடுப்பதுடன், அவற்றின் தரம் மற்றும் வளர்ச்சியை அதிகரிக்கிறது.
தாவரத்தின் புரதச் சத்தின் அளவை அதிகரிக்கிறது. இச்சத்தின் அளவு அதிகரிப்பால் தாவரத்தின் வளர்ச்சி கூடுவதுடன், பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் வாய்ப்பு உள்ளது.

பொஸ்பரஸ் (Phosphorus-P) இது தாவரத்திலுள்ள நியூக்ளிக் அமிலம் மற்றும் பொஸ்போலிப்பிடுகளில் பொஸ்பரஸ் சத்து அதிக அளவில் உள்ளது. விதை முளைக்கவும், வேர்கள் மற்றும் மலர்கள் தோன்றுவதற்கும் இச்சத்து தேவை. பயிர் முதிர்ச்சி அடைவதற்கும், தானியங்களின் தரம் மற்றும் எண்ணிக்கை அதிகரிக்கவும் இச்சத்து அவசியம். வளிமண்டலத்தில் உள்ள நைட்ரஜன் அவரை (Legume) குடும்பப் பயிர்களில் வேர் முடிச்சுகளில் நிலைநிறுத்தும் பக்டீரியாக்களின் செயல்பாடுகளை இது அதிகரிக்கிறது.

பொட்டாசியம் (Potassium - K) தாவரத்திலுள்ள கூட்டுப்பொருள் எதிலும் பொட்டாசியம் பங்கேற்காமல் தனித்து அயனியாக காணப்படும். பூச்சி மற்றும் நோய்களை எதிர்க்கவும், வறட்சியைத் தாங்கவும் பயிர்களுக்கு இச்சத்து தேவை. கனிகள் மற்றும் விதைகளின் தரத்தை அதிகரிக்க உதவுகிறது.

கல்சியம் சத்து - இது தாவரங்களின் செல்சுவர் தோன்றவும், ஆரம்ப வேர் வளர்ச்சிக்கும், தீங்கு விளைவிக்கும் அமிலங்களின் தன்மையை நீக்கவும் கல்சியம் சத்து பயன்படுகிறது. பயிர் நைட்ரஜனை கிரகித்துக் கொள்ளவும், நைட்ரஜனை நிலைநிறுத்தும் பக்டீரியாக்களின் செயலை அதிகரிக்கவும் இச்சத்து அவசியம்.
இது பயிரினூடே நகர்ந்து செல்லும் தன்மை அற்றது.

மெக்னீசியம் (Magnesium - Mg) - தாவரத்திலுள்ள பச்சையத்தில் மக்னீசியம் அதிக அளவில் உள்ளது. இது ஊட்டப் பொருட்களை உறிஞ்சும் திறனை சீராக வைத்துக் கொள்ள உதவுகிறது. தாவரத்திலுள்ள பொஸ்பரஸ் சத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டுசெல்லப் பயன்படுகிறது.
விதைகளின் எண்ணெய்ச்சத்தை அதிகரிக்க மக்னீசியம் உதவுகிறது.
அதேபோல் கந்தகம் - இது தாவரத்தில் பச்சையம் மற்றும் புரதம் தோன்றுவதற்கு உதவுகிறது.
விதை உற்பத்தி, வேர் வளர்ச்சி மற்றும் வேர் முடிச்சுகள் தோன்றுவதற்கும் கந்தகம் தேவையானது .

இரும்பு சத்து - தாவரங்களில் பச்சையம் தோன்றுவதற்கும், மண்ணிலுள்ள ஊட்டச்சத்துக்களை உறிஞ்சவும் இரும்புச்சத்து தேவை. தாவரத்தில் நடைபெறும் ஆக்ஸிகரண வினைகளுக்கான என்சைம்கள் தோன்றவும், புரத உற்பத்திக்கும் இரும்புச்சத்து அவசியமாகும்.

மங்கனீஸ் - தாவரத்தில் பச்சையம் தோன்றுவதற்கு மங்கனீஸ் உதவுகிறது.
தாவரத் திசுக்களில் நடைபெறும் ஆக்ஸிகரண வினைகளை ஊக்குவிக்கும் காரணியாக விளங்குகிறது.

துத்தநாகம் - இது தாவரத்தில் நடைபெறும் வளர்சிதை மாற்றங்களுக்கான என்சைம்களை தோற்றுவிக்க துத்தநாகம் தேவை. பயிர் வளர்ச்சிக்கு தேவையான ஆக்ஸின் (Auxin) ஹார்மோன் உருவாக முக்கிய காரணியாக செயல்படுகிறது.
தாமிரம் (Copper - Cu) தாவரங்கள் பச்சையம் தயாரிக்கவும், ஆக்ஸிகரண வினையூக்கியாகவும் தாமிரம் செயல்படுகிறது.

போரான்- தாவரம் கல்சியத்தை கிரகித்துக் கொள்ளவும், பயன்படுத்தவும், அதன் கரையும் திறனை நிலையாக வைத்திருக்கவும் போரான் உதவுகிறது. தாவரத்திலுள்ள பொட்டாசியம், கல்சியம் ஆகியவற்றின் விகிதத்தை ஒரே சீராக வைத்திருக்க பயன்படுகிறது. மகரந்தத்துகள்களின் வீரியத்தை அதிகரிக்கச் செய்கிறது.
சர்க்கரைச்சத்து உருவாகவும், அது பயிரினூடே இடம் பெயர்ந்து செல்லவும் உதவுகிறது.

மாலிப்டினம் - இது வாயு மண்டல நைட்ரஜனை நிலைநிறுத்த நேரடியாகவோ, மறைமுகமாகவோ மாலிப்டினம் பயன்படுகிறது. ஆக்ஸிகரண வினைகளுக்கான என்சைம்கள் தோன்ற இச்சத்து தேவை.

குளோரின் - இது தாவர வளர்ச்சிக்கு அத்தியாவசியமான ஊட்டப்பொருளாக குளோரின் உள்ளது.
பயிர்களின் அயனிகள் சமன்பாட்டுக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

மேற்கூறிய பேரூட்ட மற்றும் நுண்ணூட்டச் சத்துக்களின் பற்றாக்குறை மண்ணில் ஏற்படும்போது, அவற்றை ஈடுசெய்ய உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதுதான் இங்கே முக்கிய விடயம் .



இலங்கையை பொறுத்தவரையில் தொடர் விவசாயமண்ணில் இந்த இயற்கை வளமாக்கிகள் எவையும் நிரந்தரமாக இல்லாது போய்விட்டன அவை இரசாயன உரங்களால் வளமாக்கப்பட்டு பழக்கப்பட்டு விட்டன. வளமாக்கிகள் என்பது ஒருபோதும் பயிர்களில் தங்கி இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும் விவசாயம் என்பதே மண்

சம்பந்தப்பட்டதுதான் வளமான மண் என்பது தனியே நீரோடு இணைந்த விவசாயத்துக்கு மிக உகந்தது - ஆனால் நமது நாட்டில் பல ஆண்டுகளாக பாவனையில் உள்ள இரசாயன செயற்கை உரங்களால் மண் தனது சுயத்தை இழந்துவிட்டது இஅந்த மண்ணில் திடீரென இயற்கை வளமாக்கிகளை ஊட்டி விவசாய உற்பத்திகளை பெருக்குவது என்பது கல்லில் நார் உரிப்பதான செயற்பாடு.

இந்த செயற்பாடு ஒரு தசாப்தங்களுக்கு தொடரவேண்டும் அப்போதுதான் மண் மீள்நிலை பெறும் அதன் பின்னர் இயற்கை முறை விவசாயத்தை பின்பற்றலாம், ஆனால் அதுகூட நமது சனத்தொகைக்கு ஏற்ப போதியளவு விளைவையும் உற்பத்தியையும் தருமா என்றால் கேள்விக்குறிதான்.

அந்தளவுக்கு உற்பத்தியை மேற்கொள்ள எமக்கான விவசாய நிலங்களை நாம் தயார்படுத்தவில்லை. போதியளவு பயிற்சிகளை விவசாயிகளுக்கு வழங்கவில்லை ஆனால் இறக்குமதியை தடை செய்துவிட்டு உற்பத்தியை இயற்கை வழியில் பெருக்கு என்பது விழலுக்கு இறக்கப்படும் நீர்தான் - ஒட்டுமொத்தமாக பார்க்கப்போனால் இந்த முயற்சி நீண்டகால பகுப்பிற்குப்பின்னே சாத்தியமாகும் ஒரு செயற்பாடே அன்று எடுத்தேன் கவிழ்த்தேன் என செய்துவிடும் செயற்பாடு இல்லை. இதை இலங்கை விவசாயிகள் உணர்ந்த அளவுக்கு அரசு உணர்ந்திருப்பதாக தெரியவில்லை.

இலங்கையில் இப்போது தானிய வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது - 150 ரூபாவுக்கு வாங்கிய உளுந்து இப்போது ஆயிரம் ரூபாவை தாண்டிவிட்டது, கௌப்பி 150 ரூபாவுக்கு கிடைத்தது ஆனால் தற்போது அதன் விலையும் ஆயிரத்தை கடந்துவிட்டது. குரக்கன், சாமை, எள்ளு, கொள்ளு, பயறு என அனைத்து தானியங்களும் அதிகப்படியான கட்டுபடியாகாத விலையில் விற்கப்படுகின்றன, புரோட்டின் சத்துக்கு குளிசைகளையும்,சத்து மருந்து பயணிகளையும் இதை விட குறைந்த விலையில் வாங்கி பருக மக்கள் முன்வந்திருக்கிறார் இது ஒரு மோசமான சூழலை நாட்டில் உருவாக்கி இருக்கிறது.

உணவுக்கு பதிலாக அந்த சத்துக்களை மருந்துவடிவில் உட்கொள்ள மக்கள் தயாராகி இருப்பது மிகுந்த வருத்தத்துக்கு உரியது. ஆயிரம் ரூபாவுக்கு கௌப்பி வாங்கி நான்கு நாள்களுக்கு காலையில் அவித்து சாப்பிடுவதை விட 250 ரூபாவுக்கு புரோட்டின் பாணி வாங்கி 20 நாள்களுக்கு காலையில் பருகிக்கொள்ளலாம் என்கின்ற நிலைப்பாடு எதிர்கால சந்ததிக்கு நல்ல ஆரோக்கியமான செயற்பாடு இல்லை. இந்த விடயத்தில் அரசும், விவசாய, சுகாதார அமைச்சும் கண்டிப்பாக கரிசனை கொள்ளவேண்டும்.

நாம் இப்போது ஒரு பேரிடர் காலத்தில் இருக்கிறோம் இந்த இடரை நாம் சமாளிக்க உடல் வலுவே தேவையானது அதாவது போதிய ஊட்டசத்துள்ள உணவுகளே அத்தியாவசியமானவை இவற்றை நியாயமான விலையில் மக்கள் பெற்றுக்கொள்ள முடியாதுவிட்டால் இந்த பேரிடர் இன்னும் பெரும் அழிவுகளை மறைமுகமாக ஏற்படுத்திவிட்டு போகும் என்பது மறுக்க முடியாத உண்மை. ☐

## விடுமுறை நாட்களில் சிறுவர்களின் இணைய பாவனை குறித்து பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் பேசுமாறு நோர்வே ஊடக ஆணையம் ஊக்குவிக்கிறது

பல குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு, விடுமுறைநேரம் என்னும் போது அவர்களின் இணைய திரை நேரத்தையும் குறிக்கிறது. மேலும் இவ்விடயம் தொடர்பாக நோர்வே ஊடக ஆணையம் கருத்துத் தெரிவிக்கையில், பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் இணைய பாவனை குறித்து கோடைகால விடுமுறை நேரத்தில் சம்பாசனை நடாத்திக்கொள்ள ஊக்குவிக்கிறது.

சமீபத்தில், சமூக ஊடகங்களில் பலதரப்பட்ட நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் பயங்கரமான வீடியோக்களைப் பகிர்வதை எதிர்த்து காவல்துறை எச்சரித்துள்ளது. இது பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் பேச வேண்டிய ஒன்று என்று நோர்வே ஊடக ஆணையத்தின் இயக்குனர் Mari Velsand கூறுகிறார்.


பல சிறுவர்கள் சிறு வயதிலிருந்தே டிஜிட்டல் இணைய பாவனையில் மிகவும் சுறுசுறுப்பாக, திறமையானவர்களாகவும் உள்ளனர், மேலும் ஒன்பது வயதுக்கு மேற்பட்டவர்களில் 50சதவிகிதத்துக்கும் மேற்பட்டவர்கள் இணையத்தினை பயன்படுத்துகிறார்கள் அல்லது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

13 வயதிலிருந்தே, கிட்டத்தட்ட அனைத்து நோர்வே வாழ் சிறுவர்களும் சமூக ஊடகங்களைப் பார்க்கிறார்கள் என்று நோர்வே ஊடக ஆணையம் நடத்திய குழந்தைகள் மற்றும் மீடியா 2020 கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தொழில்நுட்பத்தில் சிறந்தவர்கள் மற்றும் பெற்றோருக்குத் தெரியாத புதிய பயன்பாடுகள், சேவைகளை விரைவாக கையாளுகிறார்கள்.

சமூக வலைத்தளங்களில் சிறுவர்களுக்கு வெளிப்படுத்தக் கூடாத பல விடயங்களும் உள்ளன என்பதை நாங்கள் அறிவோம். எனவே, பெற்றோர்கள் சிறுவர்கள் தமது அன்றாட வாழ்க்கையில் டிஜிட்டல் தளங்களில் ஈடுபடுவதை கவனித்தல் அதி முக்கியம் என்று Velsand தெரிவித்துள்ளார்

## புகைப்படக் காறன்

படங்களோடு பேசுதல்



# டேனிஷ் சித்திகி Danish Siddiqui

## மக்களை நேசித்த மகத்தான புகைப்படக் கலைஞன் கொல்லப்பட்டான்

நமது ஒவ்வொரு நடவடிக்கையும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போர்க்குரலாக, மனித சமூகத்தின் நன்மைக்காக மக்களை ஒன்றுபடுத்தும் அறைகூவலாக இருக்கட்டும். -சே குவேரா-

தப்பியொட்டி வாழ்தலின் பொருட்டு கையிலிருந்து ஒழுகிய காலச் சிறங்கைகளின் மீதியை வைத்துக்கொண்டு, குறைந்தபட்சம் சமூகப் பயன்பாடுடைய சில குறிப்புகளையேனும் பதிந்துவிடலாமென்ற எண்ணத்தில் ஆரம்பித்ததுதான் இந்த "புகைப்படக்காறன்" என்ற தொடர் குறிப்புகள்.

புகைப்படக்கலை பற்றிய குறிப்புகளைப் பதிய வேண்டும் என்பதில் இன்னொரு காரணமும் இருக்கிறது.

"1839இல் புகப்படம் தோன்றியது. இற்றைவரை காலத்தில் உலகெங்கிலுமான அறிவியற் சாதனைகளினாலும், படைப்புத்திறன் மிக்க கலைஞர்களின் பரிசோதனை முயற்சிகளினாலும் கலை என்ற வகையில் பாரிய வளர்ச்சி நிலைகளை அது எய்தியிருக்கிறது. ஆனால், இன்றும் ஈழத் தமிழர்களிடையில் புகைப்படத்துறை ஒரு கலையாக ஸ்தாபிதமடைந்திருக்கிறது எனக்கூறமுடியாது. ஸ்ருடியோக்களுக்குள் முடங்கியுள்ள ஒரு தொழி லாகவும், வெளியில் சில நிகழ்வுகளைப் பதிவு செய்யும் சடங்காகவுமே இது கருதப் படுகிறது. புகைப்படக் கண்காட்சிகளையோ, இத்துறைக் கலைஞர்களாகத் தமது ஆளுமைகளை ஸ்தாபித்துக் கொண்டவர்களையோ இங்கு காண முடியாமலே இருக்கிறது. எமது வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் இவை பற்றிய செய்திகளோ, கட்டுரைகளோ முக்கிய இடத்தைப் பெறுவதுமில்லை." இந்தக் குறிப்பு 1986ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த எனது முதலாவது புகைப்படக் கண்காட்சியின்போது வெளியிடப்பட்ட பிரசுரத்திலிருந்து ஒரு பகுதியாகும்.

மனித சமூகத்தின் அன்றாட வாழ்வின் அங்கமாகவும், அவசியமாகவும் திகழ்வது தகவற் பரிமாற்றங்கள். இந்தத் தகவற் பரிமாற்றப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் செய்தி ஊடகத்துறைக்கு விஞ்ஞானம் தூக்கித் தந்த வரப்பிரசாதம்தான் புகைப்படக்கலை. அது மட்டுமல்லாது வரலாறுகளைப் பதிவு செய்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் கடத்தும் சாட்சியமாகவும் இக்கலை வாய்க்கப் பெற்றது. நகர்ந்து கொண்டிருக்கும் காலத்தின் நிகழ்வுகளைக் கணப்பொழுதில் பதிவு செய்து நிறுத்தி வைக்கும் ஒரு சாதனம் இக்கலைதான். காலமாகிப்போன வரலாறுகளையும், சாட்சிகளையும், மனிதர்களையும் தனது மடியில் பாதுகாத்துத் தரும் வல்லமை இந்தப் புகைப்படக் கலைக்கு உண்டு. அதனாலேயேதான் எனது பெருவிருப்புக்குரிய கலையாக இதனைக் காண்கிறேன்.

கடந்த ஐந்து இதழ்களிலும் நம்மிடையே பயணித்துக் கொண்டிருக்கும் புகைப்படக் கலைஞர்கள் ஐவரைப் பற்றிப் பதிந்திருந்தேன். அந்தப் பதிவுகளில் இந்தக் கலைஞர்களின் கலைத்திறன், இரசனை, தொழில்நுட்பம், சமூகப்பார்வை போன்றவற்றை எழுதியிருந்தேன். ஆனால் இந்தப் பதிவை எப்படி நான் குறித்துப் போவது என்ற மனச்சங்கடமும், உடல் உள அயர்ச்சியும் கடந்த சில தினங்களாக வெகு வாகவே கொடுமைப்படுத்தி விட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சே-குவேராவின் கூற்றுக்கொப்ப உலகப்பெருவெளியில் ஒருசில கலைஞர்கள் மட்டுமே ஆங்காங்கு போர்க்குணத்தோடு பயணிக்கிறார்கள். செயற்பட்டு வருகிறார்கள். அத்தகையதொரு கலைஞர்தான் இம்மாதம் 15ஆம் திகதி (15 July 2021) தனது 40ஆவது வயதில் ஆப்கானிஸ்தானில் படுகொலை செய்யப் பட்டார்.

### Danish Siddiqui டேனஷ் சித்திகி

இந்தியா மும்பையைப் பிறப்பிடமாகக் கொண்ட டேனஷ் சித்திகி (40வயது) சர்வதேச செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸில் (Reuters) செய்திப் புகைப்படக் கலைஞராகக் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றியதோடு, ராய்டர்ஸ் பிக்சர்ஸ் மல்டிமீடியா குழுவின் தலைவராகவும் பணியாற்றி வந்தார். சுவிட்சர்லாந்தில் அகதித் தஞ்சம் அடைந்த மக்களின் அவலங்கள், ஆப்கானிஸ்தான், ஈராக் யுத்த நிலவரங்கள், நேபாள பூகம்பங்கள், மியான்மர் சிறுபான்மை ரோஹிங்கியா சமூகம் எதிர்கொள்ளும் வன்முறைகள், ஹாங்காங் ஆர்ப்பாட்டங்கள், இங்கிலாந்து முஸ்லீம்கள், வடகொரியா வெகுஜன விளையாட்டு போன்ற இன்னும்பல செய்தி, ஆவணப்படங்களைப் பதிவு செய்து உலகுக்குக் காட்டியது

மட்டுமல்லாமல், அவற்றை வரலாற்றின் சாட்சியங்களாகவும் ஆழப் பொறித்துள்ளார். இவற்றைவிட மிக முக்கியமான இவரது பதிவும், சாட்சியமும் இன்றைய பாரதப் பேர-ரசின் "கொரோனா மரணங்கள்" தொடர்பானது. விளக்குக் கொழுத்தி ஆட்டிக்காட்டினால் கொரோனா ஓடிவிடும் என்ற அதி புத்திசாலியான மோடி அரசின் கையாலாகாத் தனத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய சாட்சியப் படங்கள் அவை.

"புலிட்சர் விருது-Pulitzer Prize பெற்ற டேனிஷ் சித்திகி"

1917ஆம் ஆண்டிலிருந்து நியூயோர்க், கொலம்பியா பல்கலைக் கழகத்தால் ஊடகவியல், இலக்கியம், இசை போன்ற துறைகளுக்கு வழங்கப்பட்டுவரும் மிக உயரிய விருதாகக் கருதப் படும் விருது "புலிட்சர் விருது -PulitzerPrize" ஆகும். இது ஹங்கேரிய அமெரிக்கப் பத்திரிகையாளரும், செய்திப் பத்திரிகை வெளியீட்டாளருமான ஜோசேப் புலிட்சர் (Joseph Pulitzer) என்பவரின் பெயரால் வழங்கப்பட்டுவரும் ஒரு பரிசுத்திட்டமாகும்.
ரோஹிங்கியா அகதிகள் சந்தித்துவரும் அவலங்களையும், வன்முறைகளையும் பதிவு செய்து சாட்சியங்களாக ஆவணப் படுத்தியதற்காக, 2018இன் புகைப்படத்துக்கான "புலிட்சர் விருது" டேனஷ் சித்திகி அவர்களுக்கு வழங்கப் பட்டது.

## டேனஷ் சித்திகியின் புகைப்படக்கலை ஆரம்பப்புள்ளி

தனது பாடசாலை நாளொன்றில் இமயமலைச் சுற்றுலாவுக்குச் செல்லும்போது அயலவரிடம் இரவல் வாங்கிய கமெராவிலும், கைச்செலவுப் பணத்தில் வாங்கிய கறுப்புவெள்ளை படச் சுருளிலும் இருந்து தொடங்கியது தனது புகைப்படக் கலையின் பயணம் என டேனிஷ் சித்திகி நினைவு கூரும்போது, சிலகணம் எனது புகைப்படக் கலையின் ஆரம்பப் புள்ளிக்கு சென்றுவர நேர்வதுண்டு. அது 1978-79 எனது உறவினரான குருநகர் ஜேம்ஸ் அம்மான் அவர்களின் Olympus OM-1 கமெராவை இரவல் வாங்கிக்கொண்டு நயினாதீவுச் சுற்றுலாவுக்கு நண்பர்களோடு போய்வந்த நினைவுகள் அவை.

## டேனஷ் சித்திகி படுகொலை




16.07.2021 அன்று காந்தஹார், ஸ்பின் புல்டாக்கில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிகழ்வுகளைப் பதிவு செய்யும்பொருட்டு அதில் கலந்துகொண்ட டேனிஷ் சித்திகி படுகொலை செய்யப்பட்டார். டேனஷ் சித்திகியின் படு கொலை குறித்து ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அஷ்ரப் கானி தனது அதிர்ச்சியைத் தெரிவிக்கும் அதேவேளை, இந்தக் கொலையில் தங்களுக்கு எந்தவித பாத்தியதையும் இல்லையென தலிபான்கள் மறுத்துள்ளனர்.

இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ்வர்தன் அவர்கள் டேனஷ் சித்திகின் படுகொலையை இந்தியா வன்மையாகக் கண்டிப்பதாகச் சொல்லும் அதேவேளை, மோடி அரசின் ஆதரவாளர்கள்
"மோடிஜி ஆட்சியில் இந்தியாவை சுடுகாடாக காட்டியவன்... இசுலாமிய மதவாத ஆட்சியில் ஆப்கானிஸ்தானை அமைதிப்பூங்காவாக காட்டச் சென்று தீவிரவாத தாக்குதலில் செத்துட்டான்.. இதைதான் நியூட்டனின் மூன்றாம் விதி என்று சொல்கின்றார்கள்" (இதைப் பதிவு செய்ததும் ஒரு தமிழ்நாட்டுப் புகைப்படக் கலைஞன் தான்)
என்றவாறாக மனிதநாகரிகம் செத்த பதிவுகளையிட்டு இந்தப் புகைப்படக் கலைஞனின் படுகொலையைக் கொண்டாடுகிறார்கள்.


**Ramesh Kumar**
மோடிஜி ஆட்சியில் இந்தியாவை சுடுகாடாக காட்டியவன்.. இசுலாமிய மதவாத ஆட்சியில் ஆப்கானிஸ்தானை அமைதிபூங்காவாக காட்டச் சென்று தீவிரவாத தாக்குதலில் செத்துட்டான்..

இதைதான் நியூட்டனின் மூன்றாம் விதி என்று சொல்கின்றார்கள்..

இங்கேதான் சித்திகியின் படுகொலை குறித்துச் சந்தேகம் எழுகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரை எமக்கு இப்படிச் சந்தேகம் எழுவது இயல்புதானே.

இறுதியாக இந்தவிடத்தில் ஒன்றை நான் கட்டாயம் குறிப்பிட்டேயாக வேண்டியது கடமையாகின்றது. கடந்தகால எமது போராட்ட காலங்களில் களப்படப்பிடிப்பாளர்களாகப் பணியாற்றி, யுத்தபூமியிலேயே படுகொலை செய்யப்பட்ட, அங்கவீனமுற்ற படப்பிடிப்புப் போராளிகளையும், இன்றளவும் வாழ்வாதரத்துக்கான வகைகள் கைக்கெட்டாமல் அல்லற்படும் செய்திப்படக் கலைஞர்களையும் நாம் எந்தளவுதூரம் நினைவில் கொண்டுள்ளோம்....?? ஈழத்தின் யுத்தகளங்களில் மரணித்த எமது செய்திப் படப்பிடிப்பாளர்கள் பற்றிய விபரங்களையோ, நினைவு கூரல்களையோ, அஞ்சலிகளையோ செய்திருக்கிறோமா?

2009ஆம் ஆண்டு இறுதி யுத்த நாட்களில் இங்கு நான் பணி செய்த பத்திரிகையின் நிமித்தம் இங்குள்ள முகவர்கள் அழைத்து பல்லாயிரக் கணக்கான யுத்தகளப் படங்களைக் காண்பித்தார்கள். அவைகள் யுத்த சாட்சியங்கள். அவையெல்லாம் இன்று என்னவானது? அவற்றைப் பதிவு செய்த புகைபடக்கலைஞர்கள் பற்றிய பதிவுகள் எதையாவது குறித்துவைக்க முயற்சிகள் எடுத்தோமா....?

இந்த நெருடல்களுடனும், குற்றவுணர்ச்சியுடனும் டேனிஷ் சித்திகி அவர்களுக்கும், எமது மண்ணில் கொல்லப்பட்ட செய்திப்படக் கலைஞர்கள் அத்தனை பேருக்கும் மரியாதை வணக்கத்தைத் தெருவிக்கின்றேன்.

**-தமயந்தி-**



Vestland internasjonal fotball turnering 2021- Vestland innvandrerråd (Vestland வெளிநாட்டவர்) அமைப்பினால் வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் Vestland internasjonal fotball turnering இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்றுள்ளது.



ERITREA, FK BRØDRENE, TANZANIA, KONGO, BERGEN VEST, CHILE, SOMALIA, FC SHIBALALA போன்ற அணிகள் கலந்து சிறப்பித்தன.
04.july 2021 – 18.july 2021 வரை போட்டிகள் நடைபெற்றன.

இறுதியாட்டத்தில் பெருமளவிலான பார்வையாளர்கள் சூழ்ந்த நிலையில் FK BRØDRENE – ERITREA ஆகிய இரு அணிகளுக்கிடையிலான போட்டி 18.july 2021 இல் நடைபெற்றது.
இரு அணிகளும் மிக அபாரமாக விளையாடி 3 - 2 கோள்களால் ERITREA அணி வெற்றிக்கிண்ணத்தை தட்டிக்கொண்டது.

## ஐரோப்பாவில் பல நாடுகள் மற்றும் பகுதிகளுக்கான நுழைவு, தனிமைப்படுத்தல் மாற்றங்கள்

ஜுலை 19 முதல் புதிய சட்ட விதிகள் ஐரோப்பாவின் பல நாடுகள் மற்றும் மூன்றாம் நாடுகளுக்கான நுழைவுக் கட்டுப்பாடுகள், தனிமைப்படுத்தப்படல் தொடர்பான விடயங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என நோர்வே அரசு அறிவித்துள்ளது. நோய்த் தொற்றினை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக தேசிய சுகாதார மையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு சில முடிவுகளை அறிவித்துள்ளது.


தேசிய சுகாதார மையம் வாரம்தோறும் பல நாடுகளையும், பல பகுதிகளையும் நோய்த்தொற்று தொடர்பாக பரவலான மதிப்பீடு செய்து வருகின்றது. அதனடிப்படையில் சில நாடுகளுக்கு கடுமையான விதிகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவற்றுள் குறிப்பாக பெல்ஜியம், பிரான்ஸ் கனடா போன்ற நாடுகள் பச்சை நிறத்திலிருந்து செம்மஞ்சள்(orange) நிறத்துக்கு மாற்றமடைகின்றன.

இதுபற்றிய மேலதிக தகவல்களை www.Regjeringen.no தளத்தில் காணலாம்.

# உயிரோடு உறவாடு





**Dr. விமலநாதன் MD PhD (Senior Consultant Cardiologist, Oslo, Norway)**

**வாசகர் உடல் - உளம் சம்பந்தமான கேள்விகளும் மருத்துவரின் பதில்களும்**

நான் கடந்த ஆண்டு மலைக்கு நடந்து செல்லும் போது இருதய நோவு வந்து அவசர சிகிச்சையில் சேர்க்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது எனக்கு சுகமாக உள்ளது. நான் தொடர்ந்து மலைகளுக்கு நடந்து செல்லலாமா?

அறுவைச் சிகிச்சை மூலம் இதயத்தசைகளுக்கு குருதி வழங்கும் குருதிக் குழாய்களிலுள்ள அடைப்புக்களை கடந்து புதிய குருதிக் குழாய்களை பொருத்தப்படுகின்றது. ஆகவே இதயதசைகளுக்கான குருதிவழங்கல் சீர்செய்யப்படுகின்றது. அறுவைச் சிகிச்சை செய்த ஆரம்பத்தில் புண் ஆறும்வரை கவனமாக இருக்கவேண்டியது அவசியம். பின்பு படிப்படியாக உடற்பயிற்சியை ஆரம்பித்து நாளாந்த வாழ்க்கைக்கு திரும்புவதே குறிக்கோளாக இருக்க வேண்டும்.
ஆனால், உடற்பயிற்சியை படிப்படியாக ஆரம்பித்தே உடல்வலிமையை கட்டி எழுப்ப வேண்டும் என்பதை கவனத்தில் கொள்வது நலம்.
அவ்வாறு உடல் பலம் பெறும்போது எவ்வித தங்குதடையும் இன்றி நீங்கள் விரும்பிய வாழ்வை நீங்கள் வாழலாம்.

இதனால் எனக்கு மீண்டும் ஏதேனும் ஆபத்து உண்டா?

உடல் தன்னால் இயலாத பட்சத்தில் நோ, இளைப்பு போன்ற அறி-குறிகளை காட்டும் அப்போது அவற்றைக் கருத்தில் கொண்டு நடப்பது அவசியம். உடற்பயிற்சி செய்வது உடலுக்கு வலுச்சேர்க்குமே தவிர கேடுவிளைவிக்காது.

Astra Zeneca தடுப்பூசி முதல் தடவை போட்டவர்கள் இரண்டாவதாக வேறு வகையான தடுப்பூசியினை போட்டுக் கொள்ளலாமா?

முழுமையான எதிர்ப்புச் சக்தியை பெற்றுக்கொள்ள இரண்டாவது தடுப்பூசி போடுவது அவசியமென அறிவுறுத்தப்படுகின்றது.
நோர்வேயில் Astra Zeneca தடுப்பூசி பாவனையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்குப் பதிலாக Pfizer அல்லது Moderna தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது. இவ்வாறு போடுபவர்களுக்கு வழமையான பக்கவிளைவுகள் தவிர பாரதூரமான பக்கவிளைவுகள் எதுவும் பதிவாகவில்லை. எனவே மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு ஊசியைப் போடுவதே நலம்.

தடுப்பூசி எடுக்க முன், பின் மதுபானம் அருந்துவது பாதிப்பை ஏற்படுத்துமா?

தடுப்பூசி போட்டவுடன் உடல் எதிர்ப்புச்சக்தியை தயாரிக்கத் தொடங்குகிறது. இதற்காக உடல் தன்னிடமுள்ள முழு வலுவையும் திரட்டி செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது, மது உடலுக்கும் உடலுறுப்புகளுக்கும்
பாரமாக அமைந்து உடலைப் பலவீனப்படுத்தும் வாய்ப்புக்கள் அதிகம். எனவே இக்காலப் பகுதியில் உடலுக்கு ஓய்வு கொடுத்து அதனுடைய செயற்பாட்டிற்கு இடையூறு விளைவிக்காது இருப்பது அவசியம்.

எனக்கு தாழ்வான இரத்த அழுத்தம் உள்ளது? இது ஆபத்தானதா?

தாழ் குருதியமுத்தம் பல அசௌகரியங்களைக் கொடுக்கும். உடலுறுப்புகளுக்குப் போதுமான குருதி விநியோகம் கிடைக்காவிட்டால் சோர்வு, கவனக்குறைவு, ஆத்திரம், எதிலும் மனம் லயிக்காமை போன்ற நாளாந்த வாழ்வை பெரிதும் பாதிக்கக் கூடிய தாக்கங்களை எம்மில் ஏற்படுத்தும். அத்துடன் சிறுநீரகம் போன்ற உடலவையவங்களுக்கு போதிய குருதி செல்லாவிடில் உடலுறுப்புக்களில் பாதிப்பேற்படுவதோடு உடலில் கழிவுப் பொருட்களின் தேக்கநிலையும் ஏற்படும்.
இதற்கான சிகிச்சை மிகவும் இலகுவானது - தண்ணீர் குடியுங்கள்




சில நாட்களுக்குமுன் தற்செயலாக முகநூலை மேலோட்டமாக பார்த்துக்கொண்டிருந்தபோது "அந்தி" என்ற குறும்படம் ஒன்று கண்ணில் தென்பட்டது.
ஏழு நிமிட குறும் படம்தானே பார்த்து விட்டுத்தான் போவேமே என்று எண்ணி பார்த்தேன். படத்தின் முதல் காட்சியே பிடித்துப்போய்விட்டது. மிகச் சிறிய கரு.
ஆனால் மனதில் ஆழமாக பதியும் வண்ணம் காட்சிகளை கையாண்டிருக்கிறார் இதன் நெறியாளர் றெஜி மனுவல், கனடா.

மருத்துவர்களால் குணப்படுத்தமுடியாத நிலையில் இறந்து கொண்டிருக்கும் இறுதிநிலை புற்றுநோயாளியான தன் தந்தையை அருகில் இருந்து கவனித்துக் கொண்டிருக்கும் மகள், அவர்களுடைய நேர்ஸ் அல்லது நோயாளியை பராமரிக்கும் ஒருவர், மேலும் மகளின் கணவன் ஆகியோரின் மன உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்துவதே இந்த குறும்படம் இருந்தபோதிலும் அதற்கும் அப்பால் ஆழ ஊடுருவிச் சென்று வாழ்வின் அர்த்தம், புரிந்துணர்வில்லாத குடும்ப உறவுகள், வாழ்வின் நிலையாமை, வாழ்வும் சாவும் மோதும் மனித வாழ்வு என பல்வேறு தளங்களில் பயணிக்கிறது.



பொதுவாகவே பெண்பிள்ளைகள் தங்கள் தந்தையர் மீது மிகுந்த பாசம் கொண்டவர்கள். பிரியப்போகும் தந்தையின் கைவிரல்களை ஆதரவோடு பற்றிக்கொண்டும் தலையைத் தடவிக் கொண்டும் தந்தையோடான நினைவுகளை மனதில் மீட்டிக்கொண்டிருக்கும் மகளின் (கிருந்துஜா சிறிகாந்த்) நடிப்பு மிகச் சிறப்பாக இருந்தது.

தனது எல்லாக் கவலைகளையும் தனது விரல்களிலும் முகத்திலும் கண்களிலும் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார். உண்மையில் அந்த விரல்களும், விழிகளும் பேசுகின்றன.

“நீ இன்னும் வீட்டை வரவில்லையா பிள்ளைகள் வெயிட் பண்ணுதுகள்” என அதட்டும் குரலில் கேட்கும் கணவனுக்கு “நான் வாறன்” என்று கூறி தந்தையின் கைக்குள் இருந்து பிரிய மறுக்கும் தனது விரல்களை மெதுவாக பிரித்து எடுக்கும்போது அந்த விரல்கள் பல கதைகளை கூறிவிடுகின்றன.


தந்தை இறக்கும் தருணத்தில் கூட அவருக்கு அருகில் இருக்கும் பாக்கியம் இல்லாது போகிறதே என்ற ஏக்கம் அவள் மனதில், முகத்தில், விரல்களில் வெளிப்படுகிறது.

ஒரு சிறிய நேரத்திற்குள் மரணத்திற்கும் வாழ்விற்கும் இடையிலான மனித வாழ்வின் அவலத்தை சிறப்பாக வெளிப்படுத்தி விடுகிறது இப்படம். உண்மையில் இறந்துகொண்டிருக்கும் பாசத்திற்குரிய ஒருவரை அருகில் இருந்து பார்ப்பது மிகவும் கடினமானது. அதை வார்த்தைகளால் இலகுவில் சொல்லமுடியாது. வாழ்க்கையின் உண்மையான அர்த்தத்தை புரியவைக்கும் தருணம் அது. அந்த மகளின் நிலையில் இருந்தவர்களுக்கு மட்டுமே புரியும் உண்மை அது.

சிறிது நேரத்தின் பின், தந்தை இறந்து விட்டார் என்ற செய்தியை கேட்டு வரும் மகள் கண்கலங்கியபடி “அப்பா சாகும்போது நீங்கள் பக்கத்தில் இருந்தீர்களா?” என்று நேர்ஸ் இடம் கேட்டு “ஓம்” என்றவுடன் “தங் யூ, தங் யூ சோ மச்” என்று அந்த நேர்சை அணைத்துக் கொள்ளும் காட்சி தந்தை மீதான அவளது உண்மையான அன்பையும் அருகில் இல்லாத ஏக்கத்தையும் காட்டிவிடுகிறது.




இந்தப் படத்தில் வரும் தந்தை இறந்தவுடன் அவருக்கு பின்புறத்தில் சுவரில் தொங்கிகொண்டிருந்த ஒரு படத்தை கமெரா சற்று அழுத்தமாக பார்வையாளனுக்கு காட்டுகிறது. வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் இடையில் நடக்கும் ஒரு உரையாடலை குறிப்பதாக இருக்கலாம். ஆனால் ஒரு முக்கியமான படமாகவே தென்படுகிறது.




அடுத்து, அத்துடன் ஒரு சிறு குழந்தையின் படமொன்றும் அழுத்திக் காண்பிக்கப்படுகிறது. அந்த அறையில் தந்தையிடமிருந்த மகளின் படமாக இருக்கலாம். அந்தப்படம் ஏற்கனவே அந்த அறையின் சிறு கப்போர்ட் மேலிருந்தது.

ஒரு சிறந்த குறும்படத்திற்கான அனைத்து அம்சங்களும் இப்படத்திற்கு இயல்பாகவே அமைந்துள்ளது. கருப்பு வெள்ளை ஒளிப்பதிவே வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் மோதும் மனித அவலத்தை பதிவு செய்ய உகந்தது. ஒளி, ஒளியற்ற நிலை என்ற துருவ நிலை உணர்வுகளை சித்தரிக்க மிகப் பொருத்தமான வடிவம். கருப்பு வெள்ளையில் இப் படத்தை எடுத்திருப்பது சிறப்பம்சம். கலரில் இப்படம் சிறப்பாக அமைந்திருக்காது.

படத்தில் வசனங்கள் மிக குறைவாகவே பேசப்படுகின்றன. உடல் மொழியே இப்படத்தின் பலம். இப்படத்தில் இசை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சம்பவங்களுடனும் சூழ்நிலையுடனும் ஒத்திசைவாக செல்லும் அற்புதமான இசை.

மரணமும் வாழ்வும் என்ற ஒரு மையக்கருத்தை மட்டுமே கையாள்கிறது. குறும்படத்திற்கு மிகப் பொருத்தமான ஒற்றைத்தளம். பாத்திரங்கள் பார்வையாளனுடன் சிறப்பாக உரையாடுகின்றன. குறிப்பாக அந்தப் பெண் பாத்திரம் பார்வையாளனுடன் ஒன்றித்து விடுகிறது.

வாழ்க்கையின் புதிர்களை, ஆச்சரியங்களை உருவாக்குகின்றது இப்படம். தந்தையின் உயிர் பிரிந்த சற்று நேரத்திற்குள் மகளுக்கு நான்காவது நிலை கான்சர் உறுதியாகிவிட்டது என்றும் கீமோதேரப்பிக்கு சமூகமளிக்குமாறு அழைக்கும் தொலை பேசி உரையாடல் அதிர்ச்சி அளிக்கிறது. தனது மரணத்தை தானே நேரில் சந்திக்கப் போகும் கணம் அது. கான்சர் சந்ததி தொடர்பான நோய்தானே.

கனடிய புலம்பெயர் தமிழ் குடும்ப பின்புலத்தில் எடுக்கப் பட்டிருந்தாலும் மொழி மத வேறுபாடுகளை கடந்த சர்வதேச பொதுத்தன்மையுடன் விடயம் கையாளப் பட்டிருகிறது ஒரு சிறப்பம்சம். மரணமும் வாழ்வும் யாவருக்கும் பொதுவான உண்மைதானே.

மொத்தத்தில் ஒரு நல்ல குறும்படத்தை பார்த்த உணர்வு அந்தியைப் பார்த்தபோது ஏற்பட்டது. படம் பார்த்தபின்பும் எம்மைத் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும் நினைவுச் சிதறல்களைக்கொண்ட திரைப்படம் இது.
நெறியாளருக்கும், நடிகர்களுக்கும் இசை அமைப்பாளருக்கும், ஒளிப்பதிவாளருக்கும், திரைப்படகலையாளருக்கும் நன்றியும் வாழ்த்துக்களும். □

# நோர்வேயின் நாடாளுமன்ற தேர்தல் 2021

நோர்வேயின் நாடாளுமன்ற தேர்தல் முறைப்படி ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுவதுண்டு. அந்த வகையில் 2021இலே நோர்வே நாட்டின் பாராளுமன்றத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 13இல் நடைபெறவிருக்கின்றது. தேசிய சட்டமன்றத்திற்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான முக்கிய தேர்தலாகும். மக்களால் தேர்வு செய்யப்படும் 169பிரதிநிதிகள் 2021 - 2025 காலப்பகுதிகளில் நாடாளுமன்ற பிரதிநிதிகளாக பதவி வகிப்பர். ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். நோர்வே நாட்டின் பிரஜாவுரிமை பெற்றவர்கள், தேர்தல் ஆண்டான இவ்வாண்டில் 18வயதினை எட்டியவர்கள், நோர்வேயில் வசிப்பவர் என குடியுரிமை பதிவு (Folkeregisteret) உள்ளவர்களுக்கு வாக்குரிமை உண்டு.

வாக்குரிமை உடையோர் வாக்களிப்பதற்கு தேர்தல் நாள் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. யூலை 1ஆம் தேதியிலிருந்து விரும்பிய மக்கள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பங்களை சகல நகராட்சிகளும் ஏற்படுத்தியுள்ளன. இம்முறை டிஜிட்டல் வாக்குச்சீட்டு அனைவருக்கும் அனுப்பி வைக்கப்படும். வாக்காளர்களுக்கு அவர்களது அடையாள அட்டை மிகவும் முக்கியமானதாகும். வாக்களிக்க தகுதி உள்ள அனைவரும் தமது வாக்கு உரிமையை பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# அம்மாவின் வானொலிப்பெட்டி



-மனோ-

அம்மா, தனது இயலாத முழங்காலை மடித்துத் தரையில் அமர்ந்து பின் சாஸ்டாங்கமாக தரையில் விழுந்து வீட்டை வணங்கியபோது வீடு அமைதியாய் அழுதது. எனக்குப்பார்பதற்கு மிகுந்த சிரமமாய் இருந்தது.

அறுபது ஆண்டுகள் வாழ்ந்த வீடு. எத்தனை மனிதர்களுடன் உறவாடிய வீடு. சிறுகச்சிறுகச் சேமித்த பொருட்கள். உரிமை கொண்டாடிய பொருட்கள். சிலிர்த்து நிற்கும் பூ மரங்கள்... எல்லாவற்றையும் விட்டுவிட்டு இன்று தனியே... அனாதையாய்...

அம்மாவால் இதைத் தாங்கிக் கொள்ளமுடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அம்மா எதையும் வெளிக் காட்டிக்கொள்ளவில்லை. அவ்வப்போது வரும் உணர்வுகள் அம்மாவையும் மீறியபோது அடக்கிக்கொண்டா.

"ஓம்! அவருடைய இறப்புச் செய்தியை எங்களுக்கு அதாவது உரிமைக்காரர்களுக்கு கட்டாயம் அறிவிப்பார்களாம்! நாங்கள் விரும்பினால் வந்து இறுதிக்கிரியைகளைச் செய்யலாமாம்!
இல்லாட்டியும் பரவாயில்லையாம்! நாங்கள் வடிவாய் செய்து முடிப்பம்!!" என்று, நான் கொடுத்த பணத்திற்கு பற்றுச்சீட்டு எழுதிக்கொண்டிருந்த முதியோர் இல்ல நிர்வாகி தனது மூக்குக் கண்ணாடிக்கு மேலால் தகவல் தந்தபோது எனது இதயம் இரண்டாவது தடவையும் பிளந்தது.
எவ்வளவு வலிகளையும், வேதனைகளையும் கடந்தே வாழ்வைக் கழிக்க வேண்டியிருக்கிறது.

எல்லாம், எல்லாமே முடிந்துபோயிற்று. பெருமூச்சொன்று எனக்குள்ளிருந்து வெளிவந்தது.

அம்மாவினுடைய முக்கிய பொருட்களை ஒவ்வொன்றாய் வாகனத்துள் ஏற்றினேன். வாகனத்தின் மறுபுறம் நின்ற மாமா விக்கிவிக்கி அழுதார். என்னைக்கண்டபோது கண்ணுக்குள் மண்விழுந்தது போலச் சமாளித்தார்.

ஐம்பது வருடங்கள் பழமையான அந்த வானொலிப்பெட்டியை கடைசியாக நான் தூக்கி வந்தபோது அது பல செய்திகளைச் சொல்லியவண்ணம் இருந்தது.
இந்த வானொலிப்பெட்டிதான் அம்மாவின் கடைசி உறவு. காலை மாலை பகல் பொழுதுகளென அம்மா அந்த வானொலிப்பெட்டிக்குள்ளால் வரும் செய்திகளுக்காக காத்திருந்தா.

அது கரகரத்த குரலில் ஏதேதோ எல்லாம் சொல்லி முடித்தாலும், பிரான்ஸ், கனடா, சுவிஸ் என்றுவரும் செய்திகளுக்காக அம்மா ஏங்கிக்கொண்டிருந்தா. அந்த நாட்டுச்செய்திகளில் ஏதாவது ஒரு சொல்லாவது வராவிட்டால் அம்மாவுக்கு செய்தி நிறைவடையாது.

பிரான்சில் குண்டுவெடித்தபோது உடுப்பிட்டியிலிருந்த அம்மாவின் நெஞ்சு படபடத்தது. இதயம் துடிதுடித்தது. தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளை எண்ணிக் கலங்கினா. மரணச்செய்திகளையும், முதியோர் துயர்களையும் அந்த வானொலிப்பெட்டிக்கூடாக அறிந்து தன்னைச் சமாதானப்படுத்த முயன்று தோற்றுக்கொண்டிருந்தா.

என் கையிலிருந்த வானொலிப்பெட்டியை பிள்ளைபோல நான் தூக்கி வந்தபோது அதை தன்னிடம் தருமாறு பார்வையால் கெஞ்சினார்.

கொடுத்து விட்டுக் கைத் தாங்கலாக அம்மாவைத் தூக்கினேன். அம்மா என்னைப் பரிதாபமாகப் பாரத்தா. "நீயுமா என்னை முதியோர் இல்லத்துக்கு அனுப்புகிறாய்..?" என்பது போல இருந்த அந்தப்பார்வை.

முதியோர் இல்லத்தை பற்றி மிகவும் பக்குவமாக அம்மாவுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அம்மாவால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்பதை அவரது உடல் மொழிகள் காட்டி நின்றன.

ஐரோப்பிய நாட்டின் மனநிலைக்கு பழக்கப்பட்டுப் போன எனக்கும் அம்மாவுக்குமான மன இடைவெளி அதிகமாகத் தானிருந்தது. என்னுடைய மனநிலைக்கு நெருக்கமாக அம்மாவை இழுத்தெடுப்பது சாத்தியமல்ல. அம்மாவைத்தான் நான் நெருங்கவேண்டி இருந்தது. அது அவ்வளவு சுலபமானதல்ல என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

பதினையாயிரம் கிலோமீற்றர் தொலைவில் இருந்துகொண்டு என்னுடைய வாழ்க்கை நெருக்கடிகளுக்குள் அம்மாவையும் பராமரிப்பது உண்மையில் எனக்கு பெரும்சுமையாகவே இருந்தது. மனைவி இதை புரிந்துகொண்டாலும், பிள்ளைகளுக்கு இந்த பாசப்போராட்டம் புரியாத புதிராக இருந்தது.

ஐரோப்பிய காலாச்சார சூழலுள் முதியோர் இல்லம் என்பது மிகச் சாதாரண விடயம். நாங்கள் எங்கள் முதுமைக்காலத்தை அங்கே கழிக்க நேரலாம். அதற்கு தயாரான

மனநிலை எங்களுக்கு உருவாகி வருகிறது. யதார்த்தத்தை புரிந்துகொள்ள ஐரோப்பிய மனநிலை எங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறது.

அம்மா புரிந்து கொள்ளாதிருப்பது எனக்கு கவலையைத் தந்தது. சிலவேளைகளில் என்னையும் மீறி கோபத்தையும் வரவழைத்தது. மன மாற்றம் என்பது இலகுவில் ஏற்படக்கூடிய ஒன்றல்லவே!
தவறுதான். தவறான மனநிலைதான். அதற்காக இப்போது அம்மாவைத் தண்டிக்க முடியாது. ஒரு சமூகத்தின் மனவோட்டம் அது. அதில் எல்லாப் பக்கங்களும் இருந்தன.

அம்மாவின் காலத்தில் அவை முதியோர் இல்லங்கள் என்பதை விட அனாதை இல்லங்கள் என்ற மனப்படிவுகள்தான் இருந்தன. இந்தப்பெரிய உலகத்தில் யாருமற்ற ஒருவர்தான் அனாதையாக முடியும். அதை அவர்கள் இழிவாகப் பார்த்தார்கள். பிள்ளைகள் மற்றும் உறவுகளை தாம் தேடிய பெரும் சொத்தாகப் பார்த்தார்கள். பெருமைப் பட்டார்கள். ஆனால், அனாதை இல்லத்தின் வாசல்கள் அந்தப்பெருமையை உடைத்து நொருக்கிச் சிதைத்தன. அவர்களால் அதை தாங்கிக் கொள்ளமுடியவில்லை.

அம்மாவின் இன்னொரு போக்கு எனக்கு சங்கடத்தை தந்தது. "நீ விரும்பினால் என்னைக் கொண்டு போய் முதியோர் இல்லத்தில் விடு" என்று பந்தை மெதுவாக எனது காலடிக்கு உருட்டிவிட்டார். ஊர் என்ன சொல்லும் என்ற கவலையெல்லாம் எனக்கு கிடையாது. அம்மாவின் மனம் ஒப்பாமல் இந்தக்காரியத்தை செய்யகூடாது என்ற பெரு விருப்பு மட்டுமே எனக்குள் கிடந்து உழன்று கொண்டிருந்தது. முதல்நாள் இரவு சாமிப்படத்திற்கு முன்னால் நின்று நீண்ட நேரம் நெஞ்சுருகி அழுத காட்சி என்னை வதைத்தெடுத்தது. அம்மா, வீட்டைவிட்டு முதியோர் இல்லத்திற்குப் பயணிப்பது, இறுதிப் பயணம்போலவே எனக்குள் காட்சிகள் விரிந்தன.. இறந்த பின்னரான பயணம் வேறு. உயிருடன் பாடையிலேற்றும் கொடுமை வேறு.

இது தான் கடைசியாக அம்மாவை பார்க்கும் தருணம். இனி எந்த முகத்துடன் உறவு என்று நான் முதியோர் இல்லத்தில் போய் அம்மாவை பார்ப்பது! அல்லது வேறு யாருக்குத்தான் அப்படி ஒரு நெஞ்சுரம் வரும்! அது என்னால் முடியாது என்பது எனக்குத் தெரிந்தது. மனதுள் ஏதோ பாரமாய் இறங்கியது. மனது கனத்துக்கொண்டே இருந்தது. அம்மாவின் பயணம் தொடர்ந்தது.□




## பனையின் வட்டுக்குள் -ஹம்சத்வனி-



வலிகளைப் புதைத்தேன்
அது கள்ளாய் வடிகிறது.
உயர இருந்து பார்க்கையில்
ஊரின் அவலங்கள் தெரிகிறது.
ஏறி இருந்து
தனிமையில் என் சோகம் சொல்லிப்
புலம்பிவிட்டு
இறங்குகிறேன்.
நெஞ்சுள் பனை
சிராய்த்த காயங்கள்
கள் வரும் துளி எனத் திரண்டு
குடிப்போர் குடலில்
ஒருவித தினவு.

நூறடி ஏறி
பலசாண் வயிறு நிறைக்கும்
வாழ்வை என்னவென்பேன்?
கருக்குகள் ஒருபோதும்
கைகளை அறுத்ததில்லை.
சீவல் கத்தியும்
சினம் கொண்டு கிழித்ததில்லை.
குருத்தோலை வாழ்வுக்காய்
காவோலை வட்டுக்குள்.

காலம் காற்றைப்போல் நகர்கிறது.

புதுகள்ளின் துளிகளில் வாசனை.

ஊர் நாறிக்கிடக்கிறது
இன்னும் நான்கு மரங்கள்
ஏறக்கிடக்கு
உச்சியில் தனிமையில்
என் சோகம் வடியும்.




1965ம் ஆண்டு உருவாக்கப்பட்ட திருமறைக் கலாமன்றம், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையிலும், உலகின் பல நாடுகளிலும், அளப்பரிய கலைப்பணிகளைப் புரிந்து வருகிறது.

எம்மிடமுள்ள மண் மற்றும் மொழிப்பற்றைத் தக்கவைத்து, அழிந்துபோய்விடுமென வரலாற்றாய்வாளர்களும் பற்றாளர்களும் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்க, அதற்கு முத்தாய்ப்பாய் வழிதேடிய சித்தர் எமது இயக்குனர் அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளார். கலைமூலம் இறைபணி என்ற தாரக மந்திரத்துடன், தான் கொண்ட இலக்கை நோக்கி மிகுந்த உழைப்புடனும் தியாகத்துடனும் வைராக்கியத்துடனும் பயணித்தார். அவரது இறைபக்தியும், மண் மற்றும் மொழிப் பற்றும், மனிதத்தின் மீது அவர் கொண்டிருந்த மனிதாபிமானமும், அவருக்கு அந்த உறுதியைக் கொடுத்தது.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனரான அருட்கலாநிதி மரியசேவியர் அடிகள், யாழ் பல்கலைக் கழகம் உட்பட, இலங்கை இந்திய பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும், பிலிப்பைன்ஸ் போன்ற உலகளாவிய பல்கலைக் கழகங்களிலும் சைவ சித்தாந்த நெறிக்கான பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். பல பல்கலைக் கழகங்களின் கௌரவ பேராசிரியராகவும் ஆலோசகராகவும் பணியாற்றி வந்தார். கனடா, ஜேர்மனி, செக்கோசெலவாக்கியா போன்ற சில நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் கலைப் பிரிவில், இவரது பெயரைப் பாவிப்பதற்கு அனுமதித்தாலே போதும் என்று இவரிடம் விசேட அனுமதி பெற்றுக்கொண்ட அரிய வரலாற்றுப் பெருமைகளும் இவருக்கு உண்டு.

கனடாவில் புகழ்பெற்ற ஓர் பல்கலைக் கழகத்தின் கலைப் பிரிவில் இவரது புதுவடிவ நுண்கலை ஆற்றுகைத் தயாரிப்பும் தகவலும், ஒரு தனிப் பிரிவாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்திலுள்ள யோர்க் பல்கலைக் கழகத்தின் விசேட அழைப்பில், இயக்குனர் அவர்கள் பல தடவைகள் இங்கு வருகைதந்து விசேட விரிவுரைகளை வழங்கியதுடன், ஒரு சில தடவைகள், இலங்கையிலிருந்து பல்லின கலைக் குழுக்களை அழைத்துவந்து, பல்கலைக்கழக கலைப்பிரிவு மாணவர்களுக்கு எமது தாயகத்தின் பாரம்பரியக் கலைகளை நேரடியாக நடித்துக் காண்பித்து, பட்டறைகளையும் பயிற்சி நெறிகளையும் வழங்கியதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

மன்ற இயக்குனரின் கலை, கல்வி, தமிழ்மொழி, சைவ சித்தாந்தம், பாரம்பரியக் கலைப் பரிமாணங்களின் மீளெழுச்சி போன்றவற்றிற்கான அளப்பரிய பங்களிப்புக்கள் அபாரமானவை. கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், அடிகளாருக்கு கலாமேதை என்று பட்டமளித்து கேடயம் வழங்கியது. கனடா இந்துமாமன்றத்தின் சார்பில், கலைஞானவாரதி என்னும் பட்டம், இயக்குனருக்கு வழங்கப்பட்டது.

கனடா இந்துமாமன்றத்தின் 1998-99ம் ஆண்டிற்கான அகில உலக சைவ மாநாட்டில் அருட்கலாநிதி மரியசேவியர் அடிகள் இலங்கையிலிருந்து வந்து கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றியுள்ளார். அடிகளாரின் ஐம்பதாவது குருத்துவ விழாவை, மிகச் சிறந்த கலைவிழாவாக கனடாவில் கொண்டாடியபோது, கனடா திருமறைக் கலாமன்றம், அடிகளாருக்கு கலைத்தூது என்னும் பட்டத்தை வழங்கியது. கலைச்சிற்பி, கலைஞானி போன்ற பல பட்டங்களுடன், பேராசிரியர் டாக்டர் மரியசேவியர் அடிகள் உலகளாவிய ரீதியில் செயற்படும் திருமறைக்கலாமன்றத்தின் கிளைகள் அனைத்தையும் சீராக நிர்வகித்து, வழிகாட்டி வந்தார். தொடர்ந்தும் அவரது ஆளுமையும் பயிற்சியும் அதே வழிகாட்டுதலை வழங்க வழி சமைத்திருக்கிறார்.

குருத்துவப் பணி செய்யாமல் கூத்துப் போட்டுத் திரிகிறார் என்று அங்கும் இங்கும் குரலெழுந்த போதெல்லாம், அதைக் கண்டுகொள்ளாமல், கலைவிரும்பிகளிடமெல்லாம் எம் கலையைத் தக்கவைக்கக் கையேந்தி, யாரும் கணக்கிலெடுக்காத தெருக் கலைஞரையும், வருவாய் தராத துறையென்பதால் வீட்டில் மதிப்பில்லாமல்



முடங்கியிருந்த கூத்துத் துறைசார் ஆற்றல் கொண்ட அத்தனை கெட்டிக்காரர்களையும் தேடித்தேடி ஊக்கமளித்து, பூஜ்யத்திலிருந்து ஆரம்பித்து, திருமறைக் கலாமென்ற விதை நட்டு, இரவுபகலாகக் கண்ணீர் ஊற்றி வளர்த்த தொலைநோக்குப் பார்வைகொண்ட பிதாமகன் எங்கள் இயக்குனர். மண்ணின் மைந்தர், மண் பற்றாளர், பாரம்பரியக் கலைகளின் அழிவைத் தடுத்து, மீண்டும் உயிர் கொடுத்து மீட்டுவந்த கலைச்சிற்பி. எமது பாரம்பரியக் கலைகளுக்கான ஒரு தீர்க்கதரிசி என்றும் கூறலாம்.

அவரது வழிகாட்டலில், 1993ல் கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட திருமறைக் கலாமன்றத்தின் கனடியக் கிளை, இன்றுவரை இன மத பேதங்களைக் கடந்து, பல்வேறு கலைப் பரிமாணங்களின் ஒரு பாலமாக, மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை கூறும்:
அறமெனப் படுவது யாதெனக்கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்ட தில்லை.

அறம் என்பது நான் என்ற தனிமனித செயற்பாடுகளும் புகழும் சார்ந்ததல்ல. தேவைப் படுவோருக்கெல்லாம் உணவும் உடையும் உறையுளும் கொடுப்பதே உலகிற் சிறந்த அறம் என்பதே இதன் அர்த்தம்.

அறம் போற்றி வாழ்ந்த அடிகளார், திருமறைக் கலாமன்றத்தை, இலாபநோக்கற்ற அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டர் அமைப்பாக (NGO) இலங்கையில் பதிவுசெய்து, அதன் மூலம், வசதி குறைந்த ஏழைகள் மற்றும் கைவிடப் பட்டவர்களுக்கு விளம்பரமற்ற வகையில் அறப்பணி செய்தார். 2009ல் இடம்பெற்ற கொடிய போர் மற்றும் இனஅழிப்பின் உச்சத்தில், இலட்சக்கணக்கான எம் இரத்த உறவுகள் முட்கம்பி வேலிபோட்ட மனிக்பார்ம் போன்ற பல பாரிய திறந்த சிறைகளில் அடைக்கப்பட்டு, பட்டினிச் சாவையும் கொடிய தொற்றுநோய் அவலத்தையும் சந்தித்தபோது, அந்த முகாமுக்குள் சென்று அடிப்படை உதவிகளை வழங்க அனுமதிக்கப்பட்ட முதல் ஒருசில அமைப்புக்களில் திருமறைக் கலாமன்றமும் ஒன்றாக இருந்தது. இப்படி வேகமாக அனுமதிபெற்று மக்களுக்கு உதவ முடிந்தமைக்கான காரணம், அடிகளாரின் அறம் சார்ந்த பணிகளும் நீதியும் நேர்மையும் மிக்க தொடர்பாடல்களுமே என்றால் அது மிகையல்ல.

அடிகளாரின் ஆலோசனை மற்றும் திட்டமிடலில், 2016ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில், கனடா-ரொறன்ரோவில் சர்வதேச கலைப்பாலம் என்ற நிகழ்வை, கனடா திருமறைக் கலாமன்றம் வெற்றியுடன் முன்னெடுத்தது. தலைசிறந்த ஐந்து தாயகக் கலைஞர்கள், கனடாவிற்கு கலைப்பயணம் மேற்கொண்டு வெற்றியுடன் தாயகம் திரும்பினர்.

2020ம் ஆண்டு ஒக்ரோபரில், கனடா திருமறைக் கலாமன்றம் அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பித்த கலைப்பாலம் பயிற்சி மையத்தின் (Bridging Communities through Art and Beyond) ஆரம்ப நிகழ்வு, மீண்டும் ஒரு சர்வதேச கலைப்பாலமாக கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், அடிகளார் அத்திவாரமிட்டுள்ள இக் கலைப்பாலம், எம் பாரம்பரிய தாயகக் கலைகளை, புலம்பெயர் மண்ணில் ஆழமாக நடுவதற்கான காத்திரமான படிக்கல்லாக அமையுமென்பதை, கல்மேல் எழுத்தாக இங்கு பதிவு செய்வதில் பெருமையடைகிறோம்.



புலம்பெயர்ந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இப்பனிப் புலங்களில் பயிரிடப்பட்ட எமது இனம், மிகவும் சுதந்திரமாக காலூன்றி, வேரூன்றி, தோளுயர்த்தி தனி இனமாக வாழ, இந்த நாடுகள் எமக்கு வழி சமைத்துத் தந்ததுடன், எமது பாரம்பரிய கலைகளை வளர்த்துக் கொள்ளவும் இடமளித்தது.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குனரான, பன்மொழிப் பாண்டித்தியம் பெற்ற அண்ணாவியார், புலவர், அருட்கலாநிதி மரியசேவிர் நீக்கிலாப்பிள்ளை அடிகள் அவர்களது இழப்பு, தமிழ் மொழிக்கும் மண்ணுக்கும் கலைக்கும், குறிப்பாக எமது பாரம்பரிய தமிழ் கலைகளுக்கும் மிகப்பெரிய இழப்பு.
தொடர்ந்தும் அவரது ஆலோசனை வழிகாட்டல் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடனான பல திட்டமிடல்கள் மூலம் என்றும் எம்மோடு வாழ்வார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.□

# EM i Fotball 2021 – Sluttspillet






Nim Francen

I semifinalen spilte Italia mot Spania og England mot Danmark. Det kom som en overraskelse at Danmark klarte å holde seg ut helt til semifinalen i mesterskapet, men tapte dessverre mot England på ekstraomganger. Første målet kom fra Danmarks Mikkel Damsgaard som scoret etter 30 minutter spilt, og kun 9 minutter etter scoret Danmarks kaptein, Simon Kjær et uheldig selvmål i det 39. minutt.  Kampen gikk videre til ekstraomganger etter at stillingen sto på 1-1 etter 90 minutter spilt. I slutten av første ekstraomgang scoret Harry Kane på straffe for England og snudde kampen til 2-1 i det 104. minutt, og England gikk seirende til finalen. Storkampen mellom Italia og Spania ble heller ikke avgjort etter 90 minutter. Første målet ble scoret av Italias Federico Chiesa i det 60. minutt, og i det 80. minutt reduserte Spanias Alvaro Morata stillingen til 1-1. Kampen gikk til ekstraomganger, men var målløs og endte med straffekonkurranse, hvor Italia vant 4-2 i straffer og gikk videre til Finalen. Begge semifinalene ble holdt i Wembley stadion i London.

**Finalen**

Finalen i EM i fotball 2021 ble spilt søndag klokken 21:00, 11. juli 2021 mellom Italia og England i Wembley stadion i London, Englands hjemmebane. Finalen fikk en overraskende start med at Englands venstre back, Luke Shaw ga ledelsen til England etter bare 2 minutter. Etter mye pressing og posisjon av ballen klarte Italia å slå tilbake i det 67. minutt. Målet ble scoret av Italias midtstopper Leonardo Bonucci. Kampen gikk til ekstraomganger, men det ble ikke scoret flere mål enn de to målene som ble scoret før 90 minutter var spilt, og det ble dermed straffekonkurranse. Straffesparkene ble tatt av Harry Kane, Harry Maguire, Marcus Rashford, Jadon Sancho og Bukayo Saka for det Engelske landslaget. For Italia ble straffesparkene tatt av Domenico Berardi, Andrea Belotti, Leonardo Bonucci, Federico Bernardeschi og Jorginho. Straffekonkurransen endte 3-2 til Italia etter at Rashford, Sancho og Saka bommet på straffesparkene sine for England, mens Andrea Belotti og Jorginho bommet for Italia. Italia ble kronet til europamestere etter straffekonkurransen.

**Rasisme i EM**



Etter Englands EM tap har noen av spillerne blitt utsatt for grov rasisme. Dagen etter Englands EM drøm ble knust haglet det inn med rasistiske kommentarer rettet mot de engelske straffeskytterne. Det var ungguttene Marcus Rashford (23), Jadon Sancho (21) og Bukayo Sakha (19) som ble syndebukkene da Italia ble europamestere. De engelske supporterne har i etterkant kommet med grusomme rasistiske kommentarer på sosiale medier retter mot disse tre spillerne på grunn av deres hudfarge.

# ரிசாத் பதியுதீனும் ஹிசாலினியும்

விஜய பாஸ்கரன்




அரசியலைப் பொறுத்தவரை மிகவும் திட்டமிட்டே செயலாற்றிய ஒரு அரசியல்வாதி. அவரின் மதவாத போக்கை ஏற்காதபோதும் அவரது சமூகத்தின் தேவைகளுக்காக நிறையவே செய்துள்ளார். அரசியல் என்று வரும்போது மதவாதம் அநாகரீகமான ஒன்றாக இருந்தாலும் தான் சார்ந்த மதம் சார்ந்தவர்களின் நலனுக்காக பணியாற்றியவர். அவரளவுக்கு தமிழ் பேசும் அரசியல்வாதிகள் குறிப்பாக இந்து அரசியல்வாதிகள் மக்களுக்காக ஒரு துளியளவே-னும் செய்யவில்லை.

இப்படிப்பட்ட ரிசாத் பதியுதீன் வீட்டில் வேலைக்குச் சென்ற பெண் தீக்காயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மரணமாகியுள்ளார். இதன் குற்றவாளியாக ரிசாத் பதியுதீன் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார். இன்றைய சூழலில் அரசியல் மட்டும் சட்டரீதியான நெருக்கடிகளில் சிக்கியுள்ள ரிசாத் பதியுதீன் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடக்க சந்தர்ப்பங்கள் இல்லை. அடுத்து அந்தப் பெண்ணை எரிக்க நினைப்பவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று காப்பாற்ற நினைப்பார்களா? சம்பவம் அவர் வீட்டில் நடந்துள்ளது. ஆனால் எது எப்படி இருந்தாலும் உண்மைகள் இன்னமும் தெளிவாக இல்லை.

இந்த சம்பவம் ரிசாத் பதியுதீன் வீட்டில் நடந்தபடியால் அதற்கு அவர் பொறுப்பேற்கவேண்டும். பதில் கூறவேண்டிய தார்மீக கடமை உண்டு. உண்மைகள் வரவேண்டும்.

இந்தச் சம்பவத்தை வைத்து அவரை அரசியலில் இருந்து ஓரம் கட்ட வாய்ப்பாக பலர் கருதுகிறார்கள். வீட்டில் வேலைக்காரர்கள் இல்லாத அரசியல்வாதிகளோ அரசு அதிகாரிகளோ இல்லை. எல்லோருமே சட்டத்தை மதிக்காமல் சிறுவர்களை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். ஒழுங்காக சம்பளம் வழங்காமல் கொடுமைப்படுத்துவது நமது நாட்டில் வழமையான சம்பவங்களே.

1972-73 காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாக வடக்கே பல மலையகத் தமிழர்கள் பெரியவர்கள் குழந்தைகள் என உணவுக்காக வேலைதேடி வந்தார்கள். அவர்களுக்கு நடந்த சித்திரவதைகளை கண்ணால் கண்டிருக்கிறேன். 1960களின் முன்பாக பல சிங்கள பெண்களை யாழ்ப்பாணத் தமிழர்கள் வேலைக்கு வைத்து கொடுமைப் படுத்தியதாகவும், பலரை கர்ப்பமாக்கி பின்னர் சிசுக்களை கொன்றதாகவும் காலம் சென்ற எழுத்தாளர் எஸ்.பொ தனது பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

இன்றைக்கு ரிசாத் பதியுதீனை அரசியலில் இருந்து விரட்ட இந்தச் சம்பவத்தைப் பலர் கையில் எடுத்துள்ளனர். இது இறந்த சிறுமி மீதான அக்கறை அல்ல. இன மத வாத உணர்வுகளின் வெளிப்பாடு மட்டுமே. இறந்த டயகம கிசாலினியைப் போல பல ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமிகள் வறுமை காரணமாக சட்டத்துக்குப் புறம்பான வகையில் வேலைக்கு அமர்த்தப்பட்டு உள்ளனர்.

இந்த வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் தமிழர்கள் முஸ்லீம் சிங்கள சிறுவர்கள் என பாகுபாடு இல்லை. எல்லோருக்குமே பாதிப்பு உண்டு. அதேபோல வேலைக்கு அமர்த்துபவர்களும் இன மத பாகுபாடு இல்லை. அவர்களுக்குத் தேவை வீட்டு வேலைக்கு ஒரு ஆள். கொடுமைகள் எல்லோருக்கும் பொதுவானது. முதலாளிகள் எல்லாம் ஒரே வர்க்கம்.

டயகம கிசாலினியின் மரணத்தின் பின்பாவது வறுமை காரணமாக வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்களுக்கு நியாயம் கிடைக்குமா?அதற்காக இந்த நாட்டு மக்கள் குரல் எழுப்புவார்களா? இந்த சம்பவத்தை முன்னிலைப் படுத்தும் ஊடகங்கள் செய்திகளை விடுமா?

இதுவும் கோகிலாம்பாள் கொலை வழக்குப்போல ஊடக வியாபாரத்துக்குப் பயன்படும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கோ அல்லது அவரது குடும்பத்துக்கோ நியாயம் கிடைக்கப்போவது இல்லை. □

## உவர்நில மூலிகையின் அழிவு...



காட்டில் உள்ள அதிசயமான மருத்துவக் குணாம்சங்களைக் கொண்ட மூலிகைகளைப்போல் உவர்நிலத் தாவரங்களிலும் பல அற்புதமான மருத்துவ மூலிகைகள் எம்மிடம் இருந்து வந்தன. இன்று அவற்றில் பல இல்லாமலே அழிந்துவிட்டன. இன்னும் சில அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.



கண்டல், கண்ணா, புங்கு, இசங்கு, சடக்கு, வீளி, முள்ளி, மூரி, கிளாச்சி, வீச்சுளாத்தி, குண்டுமணி, பிரண்டை, நாகதாளி, செங்கற்றாழை, குமரிகற்றாழை, தாழை... என ஏராளமான உவர்நில மூலிகைகள்.
கடந்த இரண்டு வருடங்களில் தீவகத்திலுள்ள சிறு சிறு தீவுகளை அவதானித்தபோது பல தாவரங்கள்





மொத்தமாகவே காணாமற் போயிருந்தன.
மனிதர்களே அற்ற இந்தத் தீவுகளில் கடந்த கால்நூற்றாண்டுக்கு முன்னால் இரவில் தங்கும்போது அங்கு வீசும் காற்று மட்டுமே போதும் உடலினுள் ஒரு புது உத்வேகத்தை உண்டு பண்ணும்.

அந்தக் காற்றை இப்போ நுகர முடியவில்லை. தீவுகள் முழுவதும் பிளாஸ்டிக் கழிவுகள் நிறைந்து குவிந்து காணப் படுகின்றன.
இந்தக் கழிவுகள் தீவுத் திடல்களை அண்டிய களக்கடல்களிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.



உதாரணத்துக்கு, களக்கடலில் உருவாகும் நண்டு, மட்டி, ஊரி, சங்கு, ஆர்க்கு போன்ற ஓடுகள் கொண்ட உயிரினங்களின் மீது இரசாயனத் தாக்கங்களால் ஏற்படக்கூடிய அங்கவீனங்களை அவதானிக்க முடிகிறது.
இந்தப் படத்திலுள்ள நீலக்கால் நண்டின் குட்டியைப் பாருங்கள். அதன் வலதுகால் அங்கவீனமாக இருப்பதைக் காணமுடியும்.
அதேபோல் பெருநண்டின் மேல் ஓடு கருமையாக மாறி வருகின்றது. இவை இரசாயனக் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புக்களாகும்.
குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து உல்லாசப் பயணம் செல்லும் வெளிநாட்டுத் தமிழ்ச்சனம் தேவைக்கதிகமான பிளாஸ்டிக் கழிவுகளை இந்தத் தீவுகளில் வீசிவிட்டுப் போகிறார்கள் என்பதை அவதானிக்க முடிந்தது.
நமது சுற்றுப்புறச் சூழலையும் கொஞ்சம் கருத்தில் கொள்ளவேண்டியது நமது சமூகக் கடமையாகும்.
நமது அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்லக்கூடிய உன்னதமான பரிசு மாசற்ற நீரும் காற்றும் தான்.



# இடையில் இரண்டு இலைகளைக் காணவில்லை...?

இளந்தாரியாக காதலிக்கும்போது அவிட்டுவிட்ட "விவசாயியின் மகன் அந்த மாதிரி விவசாயம் செய்தனாங்கள்.." என்ற "பெருமை" இற்கு நிரூபணமும் செய்ய வேண்டிய நிலமை இந்த வயதிலும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நட்ட கன்றுகளில் காயை... பூவை குழையை(அதுதான் சலாட்)ப் புடுங்கி சமைத்தும், சமையாமலும் சாப்பிடும் போது இருக்கும் திருப்தி... மகிழ்ச்சி அலாதியானது. அது நாமே பிடிக்கும் மீனை சமைத்து உண்ணும்போதும் ஏற்படுவதுண்டு.

**சிவா முருகுப்பிள்ளை**

ஆடு, மாடு சாப்பிட்டால் அது குழை அதையே மனுசர் சாப்பிட்டால் சலாட் என்றாகிப் போன வாழ்க்கை. ஊருக்கு ஒருவருக்கு அல்லது அதுவும் இல்லாமல் இருந்த சக்கரை வியாதி வீட்டிற்குள் ஒருவருக்காவது என்றாகிப் போனது இன்று.
அதனால் இந்த இலை, குழை என்ற சலாட்டிற்கு நம்ம பாரம்பரிய கீரைகளையும்... கறி, வறைகளையும் விஞ்சி பச்சையாக வகை வகையாக உண்ணும் பழக்கம் பலரிடமும் ஏற்பட்டுவிட்டது. அது மருத்துவ விஞ்ஞான முறைப்படியும் சரியானதுதான்.
மரவள்ளிக் கிழங்கிற்கு பதிலாக ஏன் நெல்லுக்குப் பதிலாக இந்த சலாட்டை... இலை, குழை வகைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்று வேகமும் எடுத்த பலரில் நானும் ஒருவன்.



புளுக்கொடியலையும் குரக்கன் புட்டையும் ஏனைய சிறுதானியங்களையும் உண்ண வேண்டும் என்று புறப்பட்வர்கள் பலர்.
இருக்கும் 10அடி இற்கு 20அடி அளவிலான "தரிசு" நிலத்தில்... எனது இருப்பிடத்தின் அடி வளவில் அதுவும் 6 மாதத்திற்குள் எல்லாவற்றையும் விளைவித்து நானும் இயற்கை விவசாயி என்றும் காட்ட வேண்டும் என்ற நிர்ப்பந்தம்.

பழங்களை ரொம்பவே ருசிக்கும் நாங்கள் காய்களையும் விரும்புகின்றோம்.. அதுவும் மாங்காய், புளியங்காய், நெல்லிக்காய் என்றால்..
ஏன் அதன் பூக்களையும் ரசிக்கின்றோம்..
அந்தப் பூக்களிலிருந்து காய்கள் உருவாகுவதற்குக் காரணமான வண்ணத்துப் பூச்சிகளை அழகுக்கு அழகாக வண்ண வண்ணமாகக் கண்டும் ரசிக்கின்றோம்.

ஆனால் இந்த வண்ணத்துப் பூச்சிக்கு காரணமாக இருக்கும் மயிர்கொட்டியை (மசுக்குட்டி.... இவ்வாறு விழிப்பதை இங்கு பாவிக்கின்றேன்) வெறுக்கின்றோம். இந்த முரண்பாட்டுடன்தான் வாழ்க்கை நகருகின்றது.
"தொட்டால்.. பட்டால்.. கடிக்கும் சுணைக்கும் தடிக்கும்" என்ற அந்த உபாதைதான் காரணம் மசுக்குட்டியை வெறுப்பதற்கு.

உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு தம்மை பாதுகாத்துக் கொள்ள எடுத்துக் கொள்ளும் தற்பாதுகாப்புதான் மசுக்குட்டியின் அந்த சுணைக்கும் மயிர உம் கூட.
ஏன் மரங்களில் செடிகளில் இருக்கும் முட்களும் அவ்வாறே. இந்த இயற்கைகளை நாம் புரிந்து கொண்டு அனுசரித்துதான் வாழ்வை நகர்த்த வேண்டும்.
மாறாக நாம் தென்னை ஓலையில் நெருப்புப் பந்தம் செய்து அந்த மசுக்குட்டிகளை எரித்து வண்ணத்துப் பூச்சியின் இரண்டாம் நிலையை அழித்து மகரந்த செயற்கையிற்கான வாய்ப்புகளைக் குறைத்து காய், கனி என்று விளைச்சலைக் குறைக்கும் செயற்பாடுகளை செய்யும் முரண்நகையான செயற்பாடுகளுடனானதுதான் வாழ்க்கை ஏன் இயற்கையும்..? கூட.

என் வீட்டுத் தோட்டத்து பயிரின் நடுவே முயல்(கள்) ஒன்று தனக்கான வாகையை அமைத்து வாழுவதுண்டு. குளிர் அதிகமான பனிக்காலத்தில் நிலத்தில் துளை அமைத்து மண்ணிற்கு கீழே காத தூரம் சென்று பௌதிக விதிப்படி கதகதப்பாக வாழுவதும் உயிர் தப்புவதும் இங்கேதான்.
அவரைத் துரத்திப் பிடித்து இரையாக்க நாய்களும் என்

வீட்டில் இல்லை. நானும் அதற்குத் தயார் இல்லை. என் பிள்ளைகளும் தயார் இல்லை. தெரு நாயும் இங்கு இல்லை அதனை வேட்டையாடுவதற்கு.

எனது பின் வளவிற்குள்... தோட்டத்திற்குள்.. சுதந்திரமாக துள்ளி விளையாடும் அவரைப் பிடித்து கூட்டில் அடைத்து என் வீட்டிற்குள் "செல்ல"ப் பிராணியாக வளர்ப்பதிலும் எனக்கு உடன்பாடு இல்லை.
அவர்கள் அவர்களாக புல்லுக்குள்ளும் மண்ணிற்குள்ளும் வாழ வேண்டும். இது நாய் பூனை என்ற எல்லா செல்லப் பிராணிகளுக்கும் பொருந்தும்.

அடுபங்கரைச் சாம்பல் கூட்டில் குளிர் காய்ந்து வாழும் கதகதப்பான வாழ்வும் அணிலை துரத்திப் பிடித்து உண்டும் பதுங்கிப் பாயும் பாங்கும் என பூனையின் சந்தோஷங்களுக்கு இயல்பிற்கு நான் கூடு போட்டு அடைக்க விரும்பவில்லை. வேட்டையாடி, ஓடியாடி வளவெல்லாம் காவல் காக்கும் பண்புதான் நாய் பூனைகளின் இயல்பு அவற்றை "குயிலை புடிச்சி கூண்டில் அடச்சி கூவச் சொல்லுகிற உலகம்...." என்ற சின்னத்தம்பி பாடலைப் பாடவைக்க நான் தயார் இல்லை. ஏன் உடன்பாடும் இல்லை.

வேலியில் அமர்ந்து அங்கு படர்ந்திருக்கும் கொவ்வையின் பழங்களை உண்ணும் கிளி... பஞ்சவர்ணக் கிளிதான் அழகியாக தோன்றுவார்... அதுவே அவர்களின் சந்தோஷங்களும் கூட.

அடிவளவில் வாழும் இந்த முயலைக் காணும் போது ஏற்படும் சந்தோஷம் வண்டலூர் மிருக் காட்சி சாலையிற்கு போகும் போது ஏற்படுவதைவிட அதிக பேரானந்தம்தான். ஏன் தெகிவளை காட்சிச் சாலைக்கு கரம் கோர்த்துப் போகும் போது ஏற்படும் காதல் ரம்மியங்களை விட எனக்கு அதிகம் பெரு உவகை ஏற்படுகின்றது. இது பலருக்குமான உணர்வுதான்.

தென் ஆபிரிக்காவின் கொடிய காட்டு விலங்குகள் சிங்கம், புலி, ஒட்டகச்சிவிங்கி, காண்டா மிருகம் என்று எம்மை கூட்டிற்குள் அடைத்து துப்பாக்கி சகிதம் கொண்டு சென்று அவர்களை காண்பதில் ஏற்படும் அச்ச பரவசத்தை விட இந்த அடி வளவு முயல் எனக்கு பரவசத்தை அதிகம் தருகின்றது. சிலிர்ப்பை... பேரானந்தத்தை தருகின்றது. என் குழந்தைகளுக்கும் ஏன் என்னவளுக்கும் தான்.

ஆனால் அவர்தான் என்னைக் கண்டால் காத தூரம் தாவித் தப்பிச் சென்று விடுவார். அவர் தன் இயல்பை இழக்காமல் வாழ்வதை விரும்புகின்றார். நானும் அதனைத்தான் விருப்புகின்றேன் பிடித்து கறிக் குழம்பாக்குவதற்கோ கூட்டில் அடைத்து வீட்டிற்குள் வைத்துப் பூட்டி சிறை வாழ்க்கையை அவருக்கு கொடுக்க நாம் விரும்பவில்லை.
ஜெயகாந்தன் கூறுவதைப் போல் "சிறைகள் பூட்டப்படுவன மட்டும் அல்ல அவை திறக்கப்படவும் வேண்டும் அன்றேல் தகர்க்கப்படும்" என்பது போல் இந்த செல்ல பிராணிகளின் உணர்வலைகள் உருவாவதற்கு நான் காரணமாக இருக்கத் தயார் இல்லை.
திறக்கப்படாத (மட்டக்களப்பு) சிறையை உடைத்தவர்கள் என்ற பொதுவாழ்வும் எனக்கு ஜெயகாந்தனின் கருத்துடன் ஒன்றிப் போகச் செய்கின்றது.
முயலார் என் தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் வாழட்டும் பொந்து அமைத்து குளிர் காலத்தில் உயிர் வாழட்டும்... தப்பட்டும்...
வாடகை வாங்காத வளவுக்காரனாக நான் இருந்துவிட்டுப் போகின்றேன்.. எனக்கு ஆறடி மண் மட்டும் போதும் என்று எப்பவே முடிவிற்கு வந்தவன்..... பலரைப் போலவே....?
பட்டினத்தாரின் "காதற்ற ஊசியும் வராது கடை வழிக்கே..." என்பதில் உடன்பாடு உடையவன்.
என்ன....? நடுவிலை இரண்டு இலைகள் அவ்வப்போது காணமல் போகலாம். போகட்டுமே....
முயலும் இரு காலில் நின்று உணவருந்துமாமே...?

**எப்போதோ படித்தவை. நினைவுகளிலிருந்து.....**



முயல்கள் குழி பறிக்கும் இடத்தில் மரத்தை நடலாம். மரம் செழிப்பாக வளரும்.
புழு துளைத்த கனிகளை உண்ணுங்கள். நச்சுக் கனிகளை புழு துளைக்காது.
பூச்சிகள் உட்கார்ந்திருக்கும் காளானை தைரியமாக உணவாக எடுத்துக் கொள்ளுங்கள். விஷக் காளான்கள் மீது பூச்சிகள் உட்காராது.
அதிகம் இயற்கையான உணவுகளை உண்ணுங்கள். வலுவான கால்களையும், துணிச்சல் மிக்க இதயத்தையும் பெறுவீர்கள்.
பறவைகள் வெப்பத்தை தவிர்க்க ஓய்வெடுக்கும் இடத்தில் உங்களுக்கான நீர் ஊற்றினை தோண்டுங்கள்.
குதிரைகள் குடிக்கும் நீர் நிலைகளில் இருந்து நீர் அருந்துங்கள். குதிரை ஒருபோதும் கெட்ட தண்ணீரை குடிக்காது.
பூனை தூங்கும் இடத்தில் உங்கள் படுக்கையை இடுங்கள். அமைதி தராத இடத்தில் பூனை உறங்காது.
பறவைகள் தூங்கப் போகும் நேரத்தில் தூங்கச் சென்று, அவை விழிக்கும் நேரத்தில் எழுந்திருங்கள். வாழ்க்கை சிறப்பாக அமையும்.
மீன்களைப்போல அடிக்கடி நீரில் நீந்துங்கள். நீங்கள் பூமியில் நடக்கும்போது கூட மீன்களைப் போலவே உணர்வீர்கள்.
அடிக்கடி வானத்தைப் பாருங்கள். உங்கள் எண்ணங்களில் வெளிச்சமும், தெளிவும் பிறக்கும்.
நிறைய அமைதியாக இருங்கள், கொஞ்சம் கொஞ்சமாக கொஞ்சலாக பேசுங்கள். உங்கள் இதயத்தில் மௌனம் குடிகொள்ளும். உங்கள் மனசு எப்போதும் அமைதியாக இருக்கும்.







ஈழத்தின் தலைசிறந்த மூத்த எழுத்தாளர்களுள் மிகவும் முக்கியமானவர் "மக்கத்துச்சால்வை" எஸ்.எல்.எம் ஹனிபா அவர்கள்.

1992ம் ஆண்டு "மக்கத்துச் சால்வை" கதைக்கு தமிழ்நாட்டில் சிறந்த சிறுகதை விருதான லில்லிதேவசிகாமணி விருதைப் பெற்றுக்கொண்ட எஸ்.எல்.எம் அவர்களின் பெயருடன் இந்த "மக்கத்துச்சால்வை"யும் இவரோடு இணைபெயராகிக் கொண்டது.

இவரைக் கனம் பண்ணும்பொருட்டு எழுத்தாள, வாசக நட்புகளால் தொகுக்கப்பட்ட நூல்தான் "மக்கத்துச்சால்வை மண்ணும் மணமும்" நூலாகும்.



இரண்டு ஆண்டுகள் முயற்சியின் பெறுபலனாக இம்மாதம் (11.07.2021) கிழக்கிலங்கையில் வெளியீடு செய்யப்பட்டது.

இந்நூலில் சில வரிகளை எழுதும் பங்கு எனக்கும் கிடைத்ததையிட்டு எனது வாசகமனம் கர்வம் கொள்கிறது. அதிலிருந்து சில பகுதிகளை தேன் தமிழிதழ் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறேன். -தமயந்தி

---

சிறகு முறிக்கப்பட்டதொரு பறவையாகத் தூக்கி வீசப்பட்ட வடதுருவத்தின் பலகைச் சுவர்களுக்குள் அப்பப்போ ஆறுதலையும், ஆசுவாசத்தையும் தருவனவாக இருந்தவை பல தேசங்களிலுமாகச் சிதறடிக்கப் பட்ட தோழர்கள், நண்பர்களிடமிருந்து அவ்வப்போது வந்துசேரும் கடிதங்கள்தான்.
அப்படி 1989இன் இறுதிப் பகுதியில் தோழர் கி.பி.அரவிந்தனிடமிருந்து வந்த கடிதத்தோடு சில போட்டோஸ்ரட் பக்கங்களும் கிடைக்கப் பெற்றேன்.

ஏதோவோர் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த எஸ்.எல்.எம் ஹனிபா அவர்களுடைய "கடுகு" சிறுகதைதான் அது. அந்தச் சமயத்தில் "சிறகுகட்டி" என்ற ஒரு சிறுகதையை எழுதிக் கொண்டிருந்தேன். (அது பின்நாளில் "நாச்சிக்குடா" என்ற தலைப்பில் "ஏழு கடல்கன்னிகள்" தொகுப்பில் இடம்பெற்றது)
அதில் வரும் பிரதான பாத்திரங்களில் ஒன்று முபாரக் அலி நானா. ஏழு கடல்கன்னிகள் தொகுப்பில் இடம்பெற்ற ஏழு கதைகளிலும் முபாரக் அலி நானா இருப்பார்.
இவை வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப் பட்ட கதைகள். ஆனாலும் முபாரக் அலி நானா ஒரு பிரதான பாத்திரமாக இடம் பிடிப்பார்.

மட்டுநகரில் ஏழு கடல்கன்னிகள் தொகுப்பு அறிமுக நிகழ்வில் எஸ்.எல்.எம் நீண்டதோர் விமர்சன உரையை மிகவும் சுவைபடப் பதிவு செய்திருந்தார். அந்த வீடி-யோவைப் பார்க்க நேர்ந்தபோது எனது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஏனெனில் 1989இல் போட்டோப் பிரதியாக என்னை ஆட்கொண்ட "கடுகு ஹனிபா"தான் ஏழு கடல்கன்னிகள் கதைகள் ஏழிலும் வந்துபோகும் முபாரக் அலி நானா. இதையிட்டு நான் ஆச்சரியம் கொள்ளாமல் இருக்க முடியுமா என்ன?
மக்கத்துச் சால்வையினூடாகவும் அவரைப் படித்திருந்தேன், நேரில் கண்டறியேன். ஆனாலும் எனது எழுத்துக்களுக்குள் அவ்வப்போது அவதாரம் எடுக்கும்படியான பாத்திரமாகவே எனக்குள் வாழ்ந்திருந்தார்.

2017, 2018களில் நாட்டுக்குப் போகும் சமயங்களிலெல்லாம் தவறாமல் சென்று நானாவை சந்தித்து வருவேன்.
இரவுகளில் கல்குடா கடற்கரையில் கொள்ளி சுள்ளிகளை அடுக்கி நெருப்பு மூட்டி குளிர் காய்ந்தபடி, அந்த வெண்மற் கதகதப்பிலும், அலைகளின் பின்னணி இசையிலும் நானாவின் சுவையான கதைகளைக் கேட்பதில் கிடைக்கும் பேரானந்தம் அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

நானாவுடனான தொடர் உரையாடல்களும் சந்திப்புக்களும் அவருடன் இன்னும் இன்னும் நெருக்கத்தை வலுப்படுத்தியதற்கு நியாயமான காரணங்கள் உண்டு. மனுசன் இயற்கையை அங்குலம் அங்குலமாக இரசிக்கும் ஒரு அளப்பரிய இரசிகன். சுற்றுப்புறச்சூழல் தொடர்பான அக்கறையும், பூமியின் பசுமையை விளைவிக்கும் அயரா உழைப்பும், கடலையும், கடல் வளங்களையும் நேசிப்பதுவும் என்னை அவருக்கு மிக நெருக்கமாகவே ஆக்கிவிட்டது. □




kollevåg பேர்கன் நகராட்சிக்கு உட்பட்ட ஒரு மாசற்ற இயற்கைச் சூழல் வாய்ந்த ஒரு இடமாகும். இங்கு கோடை காலங்களிலும், குளிர் காலங்களிலும் மக்கள் ஒன்று கூடி உல்லாசமாய் பொழுதைக் கழிப்பதுண்டு. இது நீண்ட மணற் கடற்கரையும், பச்சைப் புல் வெளிகளும், சிறு சிறு மலைக்குன்றுகளும், காட்டுப்பழங்களும், ஊசியிலை மரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு அழகிய சிறிய தீவாகும்.



கடலில் குளிப்பதற்கும், Grill உணவு தயாரிப்பதற்கும் ஏதுவாக, அதற்கான சௌகரியங்களும் கொண்ட இடமாகும். சிறுவர்களை மிகவும் கவர்ந்த இடமாகவும், குதூகலமாக அவர்களது பொழுதைக் கழிக்கவும் உகந்ததாக இந்த அழகிய தீவு விளங்கி நிற்கிறது.

இவ்விடத்தில் கடந்த ஆண்டில் பேர்கன் தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தின் ஒழுங்கமைப்பில் மறைக்கல்வி கற்கும் சிறுவர்கள், இளையோர் ஒன்றுகூடினர். இவ்வாண்டு பேர்கன் தமிழ் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறுவர்கள், இளையோர் ஒன்றுகூடினர். இந்த ஒன்றுகூடல்களில் எமது சிறுவர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் பங்குபற்றி மிகவும் மகிழ்ச்சியாக கலந்து கொண்டனர்.



கோடை கால விடுமுறை காலத்தில் கொரோனா தொற்று நோயினால் சிறுவர்கள் இளையோர் வீடுகளுள் முடங்கி கிடந்து டிஜிட்டல் விளையாட்டுக்களில் மட்டும் அதிகம் ஈடுபடுவது அவர்களது மன நிலையினை பாதிக்கலாம் என நகரசபைகள் பல்வேறு செயற் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். அதேவேளை நமது தமிழ் அமைப்புக்களும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகவும் சிறப்பாகும்.